Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 20 (15.11.2003) சனிக்கிழமை இதழ்:46



'எரிக் கணேஷ்'

பல் மூக்குக் கண்ணாடி அகம்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- சங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்

'எரிக் கணேஷ்' (ச-1802)

## தென்னிலங்கை அரசியல் நெருக்கடி தீரும்வரை

# சமாதான முயற்சி தற்காலிக நிறுத்தம்; நோர்வே அரசாங்கம் நேற்று அறிவிப்பு!

## பிரதமர் ரணிலும் பேச்சிலிருந்து விலகினார்

(கொழும்பு)

**இலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கும் அதிகார இழுபறி காரணமாக, சமாதான நடவடிக்கையின் அனுசரணையாளர் நிலையிலிருந்து நோர்வே அரசாங்கம் தற்காலிகமாக விலகிக்கொள்வதாக, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.**



கொழும்பு ஹில்ரன் ஹோட்டேலில் நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள அதிகார இழுபறி தெளிவாகும் வரை, சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்திவிட்டு, பொறுத்திருந்து பார்க்கப் போகிறோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் போரை ஆரம்பியுங்கள்; பௌத்த மகா சங்கம் வேண்டுகோள்!

(கொழும்பு)

அமைச்சுக்களை மீளப் பறித்ததுடன், நாடாளுமன்றத்தை தற்காலிகமாக முடக்கிய ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ள பௌத்த மகாசபை, நாட்டில் எழுந்துள்ள அரசியல் ஆபத்தைத் தடுக்க, விடுதலைப் புலிகளுடன் மீண்டும் போரை ஆரம்பிக்கும்படி அவசர அழைப்பு விடுத்துள்ளது.

தேசிய பிக்குகள் முன்னணியும் அங்கம் வகிக்கும் பிக்குகளின் ஒரு முக்கிய அமைப்பாக விளங்கும் இந்த பௌத்த மகாசபை, நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்தம் உட்பட சமாதான முன்னெடுப்புக்களையும் உடனடியாக ரத்து செய்து, (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியிலிருந்து விலகுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஅறிவிப்பு!



(கொழும்பு)

கடந்த வருடம் பெப்ரவரி மாதத்திலிருந்து அமுலில் இருக்கும் யுத்த நிறுத்த உடன்படிக்கையின்கீழ், நோர்வே அனுசரணையாளர்களின் உதவியுடன், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து தான் முற்றாக விலகிக்கொள்வதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை அறிவித்தார்.

தனது முடிவை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், நோர்வே அனுசரணையாளர்களுக்கும், நிதியுதவி வழங்கிய நாடுகளுக்கும், இந்தியா போன்ற ஏனைய தொடர்புடைய நாடுகளுக்கும், தனது கட்சியினருக்கும், தான் ஏற்கனவே அறிவித்து விட்டதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய சூழலில் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியும் பிரதமரும் கண்டியில் இன்று சந்திப்பு?

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையேயான அதிகாரப் போட்டியினால், சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து நோர்வே அரசு தற்காலிகமாக ஒதுங்கியுள்ளதால், அடுத்த கட்ட நடவடிக்கை என்னவென்பதனைத் தீர்மானிக்க இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கண்டியில் உத்தியோகப்பற்றற்ற முறையில் சந்தித்து பேச்சுக்களை நடத்தலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கட்சிக் கூட்டத்தில் கலந்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான சமாதானப் பேச்சை

## நோர்வேயின் அறிக்கையை அடுத்து கூட்டமைப்பினர் நேற்று ஆராய்வு!

# புலிகளுடனான சமாதானப் பேச்சை பிரதமரே முன்னெடுக்க வேண்டும்!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளும், அரசும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு படையினர் சகல உதவிகளையும் வழங்குவர். இதனடிப்படையில் சமாதான முயற்சிகளை பிரதமர் தொடரவேண்டும்.

இவ்வாறு, ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அவரின் சார்பில் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் நாயகம் மனோ திட்டவெல விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாடெங்கிலும் புரிந்துணர்வும், ஆதரவும் இருக்கின்றன. இந்தத் தீர்வு நேர்மையானதாகவும், நிலைநிறுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும். மக்களிடையே தெளிவும் ஆதரவும் ஏற்படுத்துவதற்கு கடந்த சில தினங்களாக யோசனை

(10 ஆம் பக்கம் பார்க்க)



# பாதுகாப்பு அமைச்சு இல்லாமல் பேச்சை முன்னெடுக்க முடியாது!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு இல்லாது, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது. நாடு தற்போதுள்ள சூழ்நிலையில் இந்தச் சமாதான பேச்சுவார்த்தையை ஜனாதிபதியை முன்னெடுத்துச் செல்லுமாறு தான் கோரியதாக, ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் குழப்பநிலை மீள்குடியமர்வை பாதிக்கும்

தற்போதைய அரசியல் சூழ்நிலை மீள்குடியேற்றத்துக்கு காத்திருக்கும் அகதிகள் விடயத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என்ற அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் கவலை தெரிவித்துள்ளது.

குறிப்பாக உள்நாட்டில் புலம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பினர் நேற்று ஆராய்வு!

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வே, அப்பொறுப்பிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளமை குறித்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேற்றுமாலை கூடி ஆராய்ந்தது.

கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் இந்த விசேட கூட்டம் சுமார் ஒரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாவின் முடிவை ஜனாதிபதி சந்திரிகா வரவேற்பு!

(கொழும்பு)

தம்மீது வலிந்து யுத்தமொன்று திணிக்கப்படும் வரை, மீண்டும் போருக்குத் திரும்பப்போவதில்லை என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அளித்துள்ள உறுதிமொழிக்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான தூதுக்குழுவிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, இந்த முடிவு வரவேற்கத்தக்கது. இது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முடிவுக்கு சாதகமானதொரு நகர்வாக அமையுமென்றும் தெரிவித்தார்.

### விண்ணாணம் விநாசியர்



ஆப்பிழுத்த குரங்குபோல அம்மா அவதிப்படுறா...!


EXPOAIR

your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297

0712348888 0712349999 074512666 012360290 012360291

email . jaffna @ expoavi . com.

(சி -1753)

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் தோழன்...

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 2003 டிசெம்பர் நேர அட்டவணை

| | திகதி | முற்பகல் | நேரம் | பிற்பகல் | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2003<br>டிசெம்பர் 01<br>திங்கள் | 46 ஆங்கில இலக்கியம்<br>47 சிங்கள இலக்கியம்<br>48 தமிழ் இலக்கியம்<br>49 அரபு இலக்கியம் | 09.00-12.00 | 70 வரலாறு பகுதி I<br>பகுதி II | 13.00-14.00<br>14.15-16.15 |
| 2 | 2003<br>டிசெம்பர் 02<br>செவ்வாய் | 21 சிங்கள மொழியும் இலக்கியமும் பகுதி - I<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி - I<br>21 சிங்கள மொழியும் இலக்கியமும் பகுதி - II<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி - II | 09.00-10.00<br>10.15-12.15 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும் பகுதி - III<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி - III | 13.00-15.00 |
| 3 | 2003<br>டிசெம்பர் 03<br>புதன் | 31 ஆங்கிலமொழி பகுதி I<br>பகுதி II | 09.00-10.00<br>10.15-12.15 | 11 பௌத்த சமயம்<br>12 சைவ சமயம்<br>13 இந்து சமயம்<br>14 கிறிஸ்தவம் (றொ.க.)<br>15 கிறிஸ்தவம் (றோ.க. அல்லாத)<br>16 இஸ்லாம்<br>பகுதி I<br>பகுதி II | 13.15-14.15<br>14.30-16.30 |
| 4 | 2003<br>டிசெம்பர் 04<br>வியாழன் | 32 கணிதம் பகுதி II | 09.00-12.00 | 32 கணிதம் பகுதி I | 13.00-14.00 |
| 5 | 2003<br>டிசெம்பர் 05<br>வெள்ளி | 62 சமஸ்கிருதம்<br>63 அரபு<br>67 இலத்தீன்<br>68 பிரெஞ்சு<br>69 மலாய்<br>75 ஹிந்தி<br>76 ஜப்பான்<br>77 ஜேர்மன்<br>73 சுகாதாரமும் உடற்கல்வியும் பகுதி I<br>பகுதி II | 09.00-1200<br>09.00-10.00<br>10.15-12.15 | 71 புவியியல் பகுதி I<br>பகுதி II | 14.00-15.00<br>15.15-17.15 |
| 6 | 2003<br>டிசெம்பர் 06<br>சனி | 43 சமூகக் கல்வியும் வரலாறும் பகுதி II | 09.00-12.00 | 43 சமூகக் கல்வியும் வரலாறும் பகுதி I<br>92, 93, 94, தட்டெழுத்து தொகுதி I | 13.00-14.00<br>14.30-16.30 |
| 7 | 2003<br>டிசெம்பர் 09<br>செவ்வாய் | 78, 79, 80, 87, 88,89, 90, 95, 96, 97, 98 பகுதி I<br>தொழினுட்பப் பாடம் பகுதி II<br>81 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பகுதி II<br>92, 93, 94 சுருக்கெழுத்து | 09.00-10.00<br>10.00-12.00<br>09.00-12.00<br>09.30முதல் | 81 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பகுதி I<br>92, 93, 94, தட்டெழுத்து தொகுதி II | 13.00-14.00<br>14.30-16.30 |
| 8 | 2003<br>டிசெம்பர் 10<br>புதன் | 34 விஞ்ஞானமும் தொழினுட்பமும் பகுதி II | 09.00-12.00 | 34 விஞ்ஞானமும் தொழினுட்பமும் பகுதி I | 13.00-14.00 |
| 9 | 2003<br>டிசெம்பர் 11<br>வியாழன் | அழகியற் பாடங்கள் பகுதி I<br>51 சித்திரம் பகுதி III<br>52 நடனம்/நாட்டியம் (சிங்களம்)<br>53 நடனம்/ நாட்டியம் (பரதம்)<br>54 சங்கீதம் (சிங்களம்/கீழைத்தேயம்)<br>55 சங்கீதம் (கர்நாடகம்)<br>56 சங்கீதம் (மேலைத்தேயம்)<br>57 நாடகமும் அரங்கியலும்<br>பகுதி I<br>பகுதி II | 09.00-10.00<br>10.15.12.15<br>09.00-10.00<br>10.15-12.15 | அழகியற் பாடங்கள்<br>51 சித்திரம் பகுதி II | 13.00-15.00 |
| 10 | 2003<br>டிசெம்பர் 12<br>வெள்ளி | 72 அபிவிருத்திக் கல்வி பகுதி I<br>பகுதி II | 09.00-10.00<br>10.15-12.15 | 61 பாளி<br>இரண்டாம் மொழி<br>64 சிங்களம்<br>65 தமிழ் பகுதி I<br>பகுதி II | 14.00-17.00<br>14.00-15.00<br>15.15-17.15 |

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

யாழ்மாவட்ட கூட்டுறவுச்சங்களின் பணியாளர்களின் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் மாவீரர்தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

எனவே கூட்டுறவுச்சங்கங்களில் மாவீரர்களது பணியாளர்களில் மாவீரர்களின் பெற்றோர்களாக இருப்பவர்களின் பெயர், முகவரி, புகைப்படம், வீரச்சாவு அடைந்த திகதி போன்ற விபரங்களை எதிர்வரும் திங்கட் கிழமைக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு கூட்டுறவு மாவட்டச் செயலாளர் கேட்டுள்ளார். (57)

## தவறிவிட்டது

குடத்தனை வடக்கு, குடத்தனையைச் சேர்ந்த முத்தையா அழகராசா ஆகிய என்னுடைய தேசிய அடையாள அட்டை (501572594V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வடமராட்சி வடக்கு கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பிரதான வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள ஸ்ரார்வோச் வேக்ஸ் ஆகிய இடங்களில் ஒப்படைக்கவும். (சி.1803)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், கிரண் நடித்த
திவான் (சி-1752)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
AMERICAN BEAUTY

ராஜா யாழ்ப்பாணம்.
விக்ரம், சூர்யா, லைலா நடித்த
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
இரவு 9.30 மட்டும்
XXX (ஆங்கிலம்)
(சி-1751)

## 5 ஆம் ஆண்டு நீங்காத நினைவலையில்

பிறப்பு 18 - 11 - 1973 அழிப்பு 14 - 11 - 1998



**சாம்பசிவம் அருட்செல்வன்**

ஆண்டுகள் ஐந்து சென்றதையா – நாம்
அழுத கண்ணீர் இன்னும் காயவில்லை
அன்னியன் அழிப்பில் தம்பி நீ அழிந்தாய்
அன்பின் பிணைப்பால் அக்காவும் உடன் வந்தாள்
மீண்டும் உங்கள் முகம் பார்க்க நாமும்
தொழுகின்றோம் நகுலேஸ்வரத்தானை. (சி-1797)

பிறந்தது 08 - 08 - 1972 அழிந்தது 15 - 11 - 1998



**சாம்பசிவம் அருள்மொழி**

*என்றும் உங்கள் நினைவுடன்*

அன்பு அப்பா, அம்மா, சகோதரர்கள்.

*சொந்த முகவரி:* இ. சாம்பசிவம், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை
*தற்காலிக முகவரி:* வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு

## யாழ்/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

### மலர் வெளியீட்டு விழா

### இளநங்கை -II

**இடம்:** மானிப்பாய் மகளிர் கல்லூரி
**காலம்:** 16.11.2003 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு
**தலைவர்:** திருமதி வி. பசுபதிப்பிள்ளை (அதிபர்)
**பிரதம விருந்தினர்:** பொ. பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
திருமதி ச. பாலசுந்தரம்பிள்ளை
**சிறப்பு விருந்தினர்:** திருமதி றெஜினா - இருதயநாதன் (கல்வீப்பணிப்பாளர் வலிகாமம்வலயம்)
**மதிப்பீட்டுரை:** கலாநிதி க. குணராசா (உதவி அரச அதிபர் தெல்லிப்பளை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி** (சி-1800) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் தலைவருடனான சந்திப்பில் - நோர்வேப் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் செய்தியாளருக்குப் பதிலளிப்பதைப் படத்தில் காணலாம்.

# நாட்டில் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக விடுதலைப் புலிகள் மிகவும் பலமடைந்துள்ளனர்

## சிஹல உறுமயக் கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தற்போதய அரசியல் சூழ்நிலைகளில் விடுதலைப் புலிகள் மிகவும் பலமடைந்து வரும் அதே வேளை, பாதுகாப்புப் படையினர் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளனரெனத் தெரிவித்தார் சிஹல உறுமயக் கட்சித் தலைவர் திலக் கருணாரத்ன.

இந்தக் கட்சி ஒழுங்குசெய்த கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்- தற்போது வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் முழுவதும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அவர்கள் அந்தப் பகுதியில்- பொலிஸ், நீதி நிர்வாகம், படை அமைப்புக்கள் மற்றும் நிதி நிர்வாகம் போன்ற கட்டமைப்புக்களை நடாத்திவருகின்றனர்.

இந்த நிலைமை தொடர்ந்தால், விரைவில் வான்படையையும் அவர்கள் பெற்றுவிடுவார்கள். இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைமூலம்- விடுதலைப்புலிகள் கேட்கும் தனி நாட்டுக் கோரிக்கையை அரசு அங்கீகரித்துள்ளதென, அரசை அவர் எச்சரித்தார்.

முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் காலத்தில், நாட்டில் சட்டம், ஒழுங்கு சீரகுலைந்திருந்ததாகவும், பொலிஸ் படை மிகவும் சீரழிவுக்குட்பட்டிருந்ததாகவும் தெரிவித்த அவர், அந்தக் காலப்பகுதியில் பாதாள உலகக் குழுவினர்தான் - பொலிஸ் பிரிவினரைக் கட்டுப்படுத்தினர் எனவும் குற்றஞ்சாட்டினார்.

ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றமை சரியான ஒரு நடவடிக்கை ஆகும். இதற்கு நாம் எமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளோம். அத்துடன, ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேறறுக் கொணடமையானது - படைகளின் இழந்து போன கௌரவத்தை மீட்பது போன்றதாகும். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையை நாம் வரவேற்கிறோம்.

ஜனாதிபதி - தேசிய அரசு அமைப்பது தொடர்பாக பிரதமருக்கு விடுக்கப்பட்ட அழைப்பில், தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது நாட்டில் இடம்பெறும் அரசியல் நிலைகளைச் சகல நாடுகளும் கைகட்டி மௌனிகளாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா- அமைச்சர் சந்திரசேகரனின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலும் தங்கியிருப்பாரானால், அது நாட்டுக்கு மிகவும் ஆபத்தானது. சந்திரசேகரன்- நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளுக்கு, ஈழம் அமைப்பதற்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். அத்துடன், பொது ஜன ஐக்கிய முன்னணியிலிருந்து பிரிந்து சென்ற, ராஜித சேனாரட்ண, ரவி கருணாநாயக்க, எஸ்.பி திஸநாயக்க, மகிந்த விஜயசேகர ஆகியோருடனான கூட்டும் பாதிப்பினை ஏற்படுத்துமெனவும் எச்சரிக்கை செய்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய சிஹல உறுமயக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க- சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீம், ஒரு தேசத்துரோகியெனத் தெரிவித்ததுடன், அண்மையில் மணிராசன்குளம் முகாம் நோக்கிய எமது எதிர்ப்பு ஊர்வலத்தில், சூரன்கல் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்களும் தம்முடன் இணைந்து கொண்டதாகத் தெரிவிததார். இவ்வாறு முஸ்லிம்கள் இணைந்து கொண்டதற்குக் காரணம்- புலிகளால், அவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டமையாகும்.

அத்துடன், முஸ்லிம் இளைஞர்கள் - புலிகளால் கடத்தப்படுவதைத் தடுக்க, அவர்கள் ஆயுதம் ஏந்துவது தவிர்க்க முடியாதது. முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவது- கண்டியிலுள்ள மடவெலவிற்கும், கொழும்பிலுள்ள மாளிகாவத்தைக்கும்கூட பரவலாம். கொழும்பில் ஹிரு அமைப்பினரால் நடாத்தப்பட்ட சிங்கள - தமிழ் கலைக்கூடல் நிகழ்வு மூலம், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றி நல்லதொரு அபிப்பிராயத்தை ஏற்படுத்த அந்த அமைப்பின் முனைந்துள்ளார்கள் எனச் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார்.

# அடுத்த வருட வரவு - செலவுத் திட்டம் பத்தொன்பதாம் திகதி சமர்ப்பிக்கப்படும்!

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

அடுத்த நிதி ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்டம், இந்த மாதம் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என, அமைச்சரவைப பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல. பீரிஸ் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் பேசிய அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவிக்கையில்,

புதிய வரவு - செலவுத்திட்டத்தில் மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய, பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்படவுள்ளது.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்பு, விவசாயத துறையினருக்கான மானியங்கள் எனபனவும் உள்ளடங்குகின்றன.

சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு- செலவுத்திட்டத்தில் - உரமானியம் அதிகரிக்கப்பட இருப்பதோடு, வரி அறவீடு குறைக்கப்பட இருப்பதாகவும் பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# கைதிகளைத் தப்பவிட்டதாக இரு சிறைக்காவலர் கைது!

திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் நான்குபேர் தப்பிச்சென்றது தொடர்பாக, சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நால்வரும் தப்பிச் செல்லும்போது, சிறைச்சாலையின் மூன்று கதவுகளையும் திறந்து கொண்டு சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நான்கு பேரும் கயிறுகளைப் பயன்படுத்தி நேற்றுமுன்தினம் அதிகாலை சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு பேச்சு மூலமே தீர்வுகாண முடியும்

## கத்தோலிக்க ஆயர்கள் சம்மேளனம்

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்குமாறு, இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சம்மேளனம்- ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சகல மக்களும் பல்வேறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கும் இந்தநேரத்தில், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால், சுபீட்சத்தை நோக்கிச் செல்வது சிரமம் எனவும், ஆயர்கள் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது நிலவும் நெருக்கடி நிலைமைகளை - பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியுமெனச் சம்மேளனத் தலைவர் பேரருட்திரு. ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நலன்களைப் பேணும் நடவடிக்கைகளை, இரு பிரதான அரசியற்கட்சிகளும் இணைந்து செயற்படுத்துவதன் மூலமே, சமாதானம் வெற்றி அளிக்கும் என ஆயர்கள் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

# தேசிய அரசு அமைக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியின் தெளிவான நிலைப்பாடு அவசியம்!

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதாயின், அதற்கு முன்னர் அது தொடர்பான ஜனாதிபதியின் தெளிவானதும், உறுதியானதுமான யோசனைகள் அடங்கிய நிலைப்பாடு வெளிப்படுத்தப்படவேண்டும் என்று, அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தெளிவான நிலைப்பாடு வெளிப்படுத்தப்படாத நிலையில், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான நம்பிக்கைத் தன்மையைக் கட்டி எழுப்புவதில் சிரமங்கள் ஏற்படலாம்.

தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன்னர், நிறைவேற்றப்படவேண்டிய பல முக்கிய விடயங்கள் இருக்கின்றன.

ஜனாதிபதியுடனும், கட்சித்தலைவரகளுடனும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தவாரம் பேச்சுவார்த்தை நடத்தும்போது, தேசிய அரசாங்கம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### புத்திரசிகாமணி கட்சி தாவியதற்கு பொ.ஐ.மு.விளக்கம்

பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து அண்மையில் விலகி, ஆளும் கட்சியில் சேர்ந்துகொண்ட புத்திரசிகாமணியை - கட்சி மாறிய காரணம் என்னவென, விளக்கம் கேட்டுள்ளார் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம் ஜெயரத்ன.

புத்திரசிகாமணி - பொஜன ஐக்கிய முன்னணியிலிருந்து விலகியமைக்குக் காரணத்தை இருவாரங்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டுமெனவும், இல்லையேல் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும், அவருக்கு அனுப்பிய கடிதத்தில் டி.எம். ஜெயரத்ன மேலும் கேட்டுள்ளார். (01)

# வடக்கு- கிழக்கு இணைப்பு குறித்த அபிப்பிராய வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

## ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

வடக்கு - கிழக்கு மகாணங்களை இணைப்பது அல்லது பிரிப்பது குறித்த கருத்துக்களைப் பெறுவதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஒத்திவைத்துள்ளார்.



நவம்பர் 10 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்மூலம், ஜனாதிபதியால் இந்த உத்தரவு வெளியிடப்பட்டது.

கிழக்கு மாகாணத்துக்கான வாக்கெடுப்பு - அடுத்தவருடம் நவம்பர் 17 ஆம் திகதிவரையும், வட மாகாணத்துக்கான அபிப்பிராய வாக்கெடுப்பு - அடுத்த வருடம் நவம்பர் முதலாம் திகதிவரையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு- 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி நடத்தப்படவிருந்தது. அதன் பின்னர், இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு, கிழக்கு மாகாணத்துக்கு- இந்த வருடம் நவம்பர் 17 ஆம் திகதியும், வட மாகாணத்துக்கு- இந்த மாதம் டிசம்பர் முதலாம் திகதியும் நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மைக்கட்சிப் பிரதிநிதிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மூன்று சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில், நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளது.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்தப்பேச்சுவார்த்தையில், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம், மலையகமக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான பி.சந்திரசேகரன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன், பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது - தற்போதய அரசியல் நெருக்கடி நிலை, அதற்குச் சுமுகமாகத் தீர்காணும் வழிவகைகள், சமாதான நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஆர்)

# இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராம்

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்வுகாண்பதில், அர்ப்பணிப்புடன் செயலாற்றத் தயாராக இருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் நடாத்திய கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

பொருளாதாரத்தைத் துரிதகதியல் மேம்படுத்துவதற்கும், அதனுடன் தொடர்புடைய பொருளாதார சீர்திருத்தத்தினை மேம்படுத்துவதற்குத் தாம் எப்போதும் தயாராக இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்ததாக, ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைத்தான் எடுத்ததன் மூலம், நாட்டில் அரசியல் மாற்றங்கள் எதுவும் ஏற்படாதெனவும், அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகளால், தாம் வழங்கும் நிதியுதவி உரியமுறையில் பயன்படுத்தப்படுகிறதா? என்பதைத் தெரிந்துகொள்ளவே - இந்தச் சந்திப்பு உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# கிருஷாந்தி கொலைவழக்குத் தீர்ப்பை தள்ளுபடி செய்யக் கோரிக்கை

## அரசதரப்பு சட்டத்தரணிகளால் விடுக்கப்பட்டுள்ளது

கிருஷாந்தி குமாரசாமியின் கொலைவழக்கில் - மூன்று நீதிபதிகள், மூன்று வெவ்வேறு தீர்ப்பை எழுதியிருப்பதால், வழக்கு தள்ளுபடியாக்கப்பட வேண்டுமென அரசதரப்பு சட்டத்தரணிகளால் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நேற்று முன்தினம் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, விசேட ஐந்து நீதிபதிகள் வழக்கின் தீர்ப்பை ஆராய்ந்தார்கள். கலாநிதி சிரானி பண்டாரநாயக்க, பி.எதுசூரிய, எச். எஸ். யாப்பா, அசோகா டி சில்வா, நிஹால் ஜயசிங்க ஆகிய ஐந்து உச்சநீதிமன்ற நீதிபதிகளே இந்த வழக்கை ஆராய்ந்தார்கள்.

ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பில், மூன்று நீதிபதிகள் வெவ்வேறு மூன்று விதமான தீர்ப்புக்களைத் தயாரித்திருப்பதை ஆதாரம் காட்டி, இந்த வழக்கைத் தள்ளுபடி செய்து, சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இராணுவச் சிப்பாய்களான ஆர். டி.சோமரட்ண ராஜபக்ஷ, ஜீ.பிரதீப் பியதர்ஷன, ஏ.எஸ்.பி.பெரேரா, டி.எம். ஜயதிலக, டி.வி.இந்திரஜித்குமார, ஜே.எம்.ஜயசிங்க ஆகியோரே இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதுடன், அடையாளம் காணப்பட்டு, சக படைச்சிப்பாய்களால் உறுதி செய்யப்பட்டவர்கள்.

இவர்கள் குற்றவாளிகள் என்று ஏற்கனவே உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது, இங்கே குறிப்பிடத்தக்கது. இதற்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்த இந்தக் குற்றவாளிகளின் சட்டத்தரணிகளான ரஞ்சித் அபேசூரிய, டாக்டர் ரஞ்சித் பெர்ணாண்டோ ஆகியோரும், அரசதரப்பு சட்டத்தரணியான சீ.ஆர. டி.சில்வா, சரத் ஜயமன ஆகியோரும் இந்த நீதிபதிகளின் இறுதித் தீர்ப்பை சட்டத்திற்கு முரணானது என்றுகூறி, ரத்துசெய்ய வேண்டுமெனக் கேட்டுள்ளனர்

# கிராம அலுவலர் பிரிவுரீதியாக தொகை மதிப்பீட்டுப் பணிகள்

இருபது ஆண்டுகளின் பின்பு, யாழ்ப்பாண குடாநாட்டில் கிராம சேவையாளர் பிரிவுரீதியாக, தொகை மதிப்பீட்டுப் பணியானது பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து, இதுவரை செயற்படுத்தப்படாது இருந்த வர்த்தக நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள், கைத்தொழில் கூடங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள், சேவைகள் வழங்கும் நிறுவனங்களைப் பதிவு செய்யும் பணியானது துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில், செய்யப்பட்ட தொகை மதிப்பீட்டின் பின்பு, 20 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பணி இடம்பெறுவதும் இந்தப் பணியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு, காணப்படுகின்றன எனவும் கிராம சேவையாளர்கள் கூறுகினறனர். புதிதாகக் குடாநாட்டில் பல வர்ததக நிறுவனங்கள் தமது வேலைகளை மேற்கொள்வதும், பல நிறுவனங்கள் புதிதாக தமது சேவையினைக் குடாநாட்டில் மேற்கொள்வதும் இதற்குக் காரணமாகும். (205)

## புத்தாக்குநர் தெரிவில் முதலிடம்



வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையே, இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு நடாத்திய - புத்தாக்குநர்களை தெரிவு செய்யும் கண்காட்சிப் போட்டியில், கனிஷ்ட பிரிவில் முதலாவது இடத்தை அ.ஜெனால்ட் பெற்றுக் கொண்டார்.

இவருக்கு தங்கப் பதக்கமும், 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது. (119)

# பெண் விவசாயிகளுக்கு பயிற்சிக் கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையம், சமூக அபிவிருத்தி மன்ற அங்கத்தவர்களுக்காக - ஒழுங்கு செய்து நடத்தவுள்ள கிராமியப் பெண் விவசாயத் தொழிலாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு, நாளை காலை 9.00 மணியிலிருந்து முழுநாள் நிகழ்வாக மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - கிராமிய விவசாயக் கடன் தொடர்பாக, மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் என்.ஜெயரட்ணம் உரையாற்றவுள்ளார். மானிப்பாய் தெற்கு - வடக்கு, சண்டிலிப்பாய் பிரிவுகளை உள்ளடக்கிய விவசாயத் தொழிலாளர்களின் சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக அவ்வப்பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்களான - யே.அருள்ராஜ். பி.நிருபன், கே.தவபாலன் ஆகியோர் கருத்துக்களைத் தெரிவிக்கவுள்ளனர்.

மேலும் விவசாயத்தோடு இணைந்த வருமான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக, சண்டிலிப்பாய் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் - சாவித்திரி குகனேஸ்வரனும், இயற்கைப் பசளை பாவனை தொடர்பாக - சண்டிலிப்பாய் விவசாயப் போதனாசிரியர் பரமேஸ்வரி மணிவர்மனும் உரையாற்றவுள்ளனர். (44)



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை நடாத்திய - இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் விழாவில், பருத்தித்துறைப் பிரதேசசபை பிரதம நூலகர் எஸ். திருச்செல்வம் கண்பார்வை குறைந்த ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி அணிவிப்பதைப் படத்தில் காணலாம். (17)

## துப்பாக்கியை விற்க முயன்ற பெண் கைது

லக்கல பிரதேசத்தில் ரி.56 ரக துப்பாக்கியை விற்க முயன்ற பெண்ணொருவரை, தம்புள்ள பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர் கொடுத்த தகவலின்படி, மேலும் ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் தம்புள்ள நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

# பரிந்துரைகள் வழங்குவதற்கு குழுக்கள் தெரிவாகியுள்ளன

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவிலிருந்து, 13 கிராம அலுவலர் பிரிவுகளையும், வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி)பிரதேச செயலர் பிரிவில் இருந்து 9 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கி, வல்வெட்டித் துறையை மையமாகக்கொண்டு வடமராட்சி மேற்கு எனும் பிரதேச செயலகம் அமைக்குமாறு, விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் - கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் மூலம் பக்கச்சார்பற்ற முறையில் பரிந்துரைகள் வழங்க குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்தக் குழுவின் அறிக்கைகள் கிடைத்தபின், அதன் அடிப்படையிலேயே புதிய பிரதேசசெயலர் பிரிவுக்கான எல்லை நிர்ணயம் பற்றிய இறுதி முடிவு மேற்கொள்ளப்படும்.

இதன்மூலம் - தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி பொலிகண்டி பகுதி மக்கள் தங்கள் தேவைகளை இலகுவாகப் பெறமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## உயர்தர மாணவருக்கு நிதியுதவி

புலம்பெயர்ந்து லண்டனில் வாழும் யாழ்.அராலி இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள், அங்கு அண்மையில் யூ.கே.அராலி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

இந்தச் சங்கமானது - கல்லூரியில் கடந்த வருடம் க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவன் இ.புவீந்திரன் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபாவையும், உயர்தரம் கற்பதற்கு தகுதியான பெறுபேறு பெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் தலா இரண்டாயிரம் ரூபாவையும் கல்வி ஊக்குவிப்பு பணமாக அண்மையில், பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது, வழங்கியுள்ளனர். (118)

## மாவீரர் தின ஏற்பாடுகள்

இந்த மாதம் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள, மாவீரர் நாள் நிகழ்வுகளில் 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை மாவீரர் எழுச்சி நாட்களாகவும், 25 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை மாவீரர் நாட்களாகவும் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

மாவீரர் எழுச்சி நாட்களில் - பெற்றோர் கௌரவிப்பு, சிரமதானப் பணி, மரநடுகை, பதாதைகள், அலங்கார வளைவுகள், ஒலிபெருக்கியில் பாடல்கள் என, எழுச்சிமிகு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. 27 ஆம் திகதி மாலை 6.5 நிமிடத்திற்கு மணி எழுப்பி, பொதுச் சுடர் ஒவ்வொரு இந்து ஆலயங்களிலும் ஏற்றப் படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை, பொது அமைப்புக்களின் ஒன்றியங்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர், சைவ பரிபாலனசபையினர ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (91)

# கழிவு வாய்க்கால்களினால் தொற்றுநோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

கழிவு வாய்க்கால்கள் சுத்திகரிக்கப்படாமையால், மழைநீர் தேங்கிநின்று தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின்புறுமாகவும், 512 ஆவது படைப் பிரிவுத் தளத்திற்கு முன்புறுமாகவும் செல்லும் கழிவு வாய்க்கால் சுத்திகரிக்கப்படாத நிலையிலுள்ளது.

இதனால், தொடர்ந்து பெய்யும் மழையானால் வரும் வெள்ளமும், ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளும் கடலை அடையாமல் தேங்கிக்கிடக்கின்றன.

வாய்க்காலின் பல பகுதிகளிலும் இருவகைப் புல் வளர்ந்துள்ளது. அதைவிட - வியாபாரிகளாலும், பொதுமக்களாலும் கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் வாய்க்கால் தடைப்பட்டுள்ளது.

இதனால் - வெள்ளமும், கழிவு நீரும் ஓடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. நுளம்புகளின் வாழ்விடமாக, இந்தக் கழிவு வாய்க்கால்கள் மாறிவருகின்றன. அண்மைக்காலமாக யாழ்பாணத்தில் டெங்கு நோய் பரவுவதாக அறியப்பட்டும், இத்தகைய கழிவு வாய்க்கால்களை அதிகாரிகள் சரியான முறையில் பேணாமையினையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச)

## சமூக அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் - நாளை காலை 9 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் சமூக அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதில் - கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களில் இருந்து இரு பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாமென கரவெட்டி பிரதேச செயலக செயலர் க.கனகரத்தினம் அறிவித்துள்ளார்.


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : கி.கொரிஷன்
முகவரி : குருக்கஞர், வவுனியா.

பெயர் : சு.சரண்யா
முகவரி : 1038, உப்புக்குளம், மன்னார்.



ஐந்தாவது அகவையில்



பெயர் : ரா.பிருந்தாபன்
முகவரி : குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு.

எட்டாவது அகவையில்

பெயர் : ந.நாகதீபன்
முகவரி : 1 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு.





பெயர் : யோ. பிரதர்சன்
முகவரி : அல்லாரை வடக்கு, கொடிகாமம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------
முகவரி :--------------------
பிறந்த ஆண்டு:--------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

# சந்தேகம் → விளக்கம்



**பால் பொங்குவதன் காரணம் என்ன?**

பால், நீரிலிருந்து வேறுபட்டது. பாலில் புரதம், கொழுப்பு மற்றும் அயன்களும் உள்ளடக்கியுள்ளது. பாலை சூடேற்றும் போது, பாலிலுள்ள நீர் - கொதிநிலை அடைந்தவுடன், ஆவியாகி வெளியேறும். அதேசமயம் பாலிலுள்ள புரதம் மற்றும் கொழுப்புப் பொருட்கள் பிரிந்து, இலேசாகி மேற்புறத்தில் ஆடைபோல் படியும். ஆடைபடியத் தொடங்கியவுடன், அது நீராவியாகி வெளியேறு வதைத் தடுக்கும். இதனால், நீராவி வெளியேறாமல் விரிவடைந்து மேலெழும்பும். இதனைத் தான் நாங்கள் 'பால் பொங்குகிறது' என்று சொல்கிறோம்.

# MY GARDEN


My hobby is Gardening. I have a small garden in my house. It is a vegetable garden. It is situated behind the kitchen. There are many kinds of vegetables in my garden. We have brainjals, papaw, long beans, pumkin.in my garden. I water the garden after school. My parents also help me watering the garden. I sell vegetables at the market. We don't run short of vegetables. We give vegetables to the neighbours. I like my garden.

Sobiya chandrapala, year- 07
J/pariyapulam maha vidyalayam.

# எது ஆபத்து

அது ஒரு செங்குத்தான பாறை. சிங்கத்தால் அதில் ஏற முடியாது. பாறை உச்சியில் வெள்ளாடு நின்றுகொண்டிருந்தது.

'சமவெளியில் ஏராளமான பசும்புல் இருக்கிறது. அங்கு போய் மேயலாமே! என்று பரிவாக விசாரித்தது சிங்கம்.




'இப்போது என் உயிர்காக்கும் மூலிகை இங்குதான் இருக்கிறது. அதனால் நான் இங்கேயே மேய்கிறேன்' என்றது வெள்ளாடு. 'இளங்கன்று நீ! பயம் அறியாமல் துள்ளித் திரிகிறாய். கீழே இறங்கி வந்துவிடு. செங்குத்தான பாறை மீது ஏறியிருக்கிறாயே! ஆபத்து. உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். வந்துவிடு' என்றது சிங்கம்.



'ஆபத்து எதுவும் இப்போதைக்கு இங்கே இல்லை. என் நன்மைக்காகப் புத்திமதி சொல்கிறீர்களே என்று இறங்கி வந்தால், அங்கேதான் எனக்கு ஆபத்து காத்திருக்கிறது. ஏனென்றால், நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். சமவெளிக்கு வந்தால், எனக்குப் பசும்புல் கிட்டாது. உங்கள் பசிக்கு நான் இரையாவேன் என்றது வெள்ளாடு.

வெள்ளாட்டைப் பாய்ந்து பிடிக்கமுடியாது. எனவே, ஏமாற்றத்தால் உருமிக்கொண்டு சிங்கம் அங்கிருந்து போனது.

# கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்





1. கேள்விக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய எண் எது?

2. விடுபட்ட ஆங்கில எழுத்துக்களை கண்டுபிடியுங்கள்!

| A | U | G | M | ? |
|---|---|---|---|---|
| Y | D | Q | J | ? |

# சென்றவார விடைகள்

1. சாமம். 5. குடம்.
2. வானம். 6. தாயம்.
3. கானம். 7. நாகம்.
4. விலகு.



**விடுகதைக் கூட்டல்கள்**

எந்தப் பக்கத்தால் கூட்டினாலும், கூட்டுத்தொகை 45 ஆக வரவேண்டும். நீங்கள் பயன்படுத்த வேண்டிய இலக்கங்கள் 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19 ஆகியன வாகும்.

ம.நிரோஷனா
தரம் - 9
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

# கண்டுபிடிப்பு



தோமஸ் அல்வா எடிசன் - மின்குமிழ்
லூயிபாஸ்டர் - பற்றீரியாவியல்
கிரகர்மென்டல் - பிறப்புரிமையியல்
மார்க்கோனி - வானொலி
அலெக்சான்டர் கிரகம்பெல் - தொலைபேசி
றொபேர்ட்கொக் - பற்றீரியா நோய்கள்
சார்ல்ஸ் பபேஜ் - கணனி

தி.ஜெனத்குமரன்
யாழ். கோப்பாய் றோ.க.த.க பாடசாலை.

இங்கே மடிக்கவும்




# தந்திரத்தால் பூனையைக் கொன்ற எலிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தது அண்ணா எலி. பூனையின் வாயில் தம்பி எலி துடிதுடித்தது. அதைப் பார்க்க அண்ணா எலிக்கு ஆத்திரமாக இருந்தது. "நாம் பூனைகளுக்கு எந்தத் துன்பமும் செய்யாதிருக்க, எம்மினத்தை அழிக்கும் பூனையைக் கொல்லவேண்டும்" என்ற துடிப்பு மனதில் எழுந்தது.

அம்மாவும், தாத்தாவும், அப்பாவும், தம்பியின் மரணச் செய்தி கேட்டு புலம்பி அழுதனர். அக்கா எலியும், தங்கை எலியும் விம்மி விம்மி அழுதனர்.



"இன்றைக்கும் நாங்கள் எல்லோரும் பட்டினி கிடக்கவேண்டியதுதான்' என்றது அம்மா எலி.

"எங்கட விதி இது. கஷ்டப்படுகிறம். இதைத் தீர்க்க யாராலும் முடியாது. எமது இனத்தைக் கடவுள்தான் காக்கவேண்டும். அப்பனே பிள்ளையாரே, எதிரி எம்மைக் கொல்கிறானே. எமக்கு மீட்சி இல்லையா" என்று அழுதது தாத்தா எலி.

"தாத்தா அழுவதால், எந்த விதமான பிரயோசனமும் இல்லை. எமது முன்னோர் - பூனைக்கு மணி கட்டுவதற்கு முயற்சித்துத் தோல்விகண்டனர். ஆனால், நான் கடைசிவரையும் தோல்வியடையமாட்டேன். எப்படியாவது எம்மை வருத்தும் அந்தப் பூனையைக் கொல்வேன்" என்று சப்தமிட்டது அண்ணா எலி.


'நீ கட்டாயம் செய்வாய் அண்ணா. வயது சென்றவர்களிடம் பழைய அடிமைப்புத்தி இருக்கும். அதை நீக்குவது மிகவும் கஷ்டம். முயன்றால் முடியாதது எதுவுமில்லை. உனக்குத் துணையாக நான் இருப்பேன் அண்ணா. எந்த நாளும் அஞ்சி அஞ்சி சாவதைவிட, பூனையை எதிர்த்து ஒருநாள் வாழ்வது மேல்" என்றது அக்கா எலி.

"நானும் உனக்குத் துணைக்கு வருகிறேன் என்றது தங்கை எலி". "விசர்க்கதை கதையாதை. துணைக்குப்போன தம்பி எலியின்ரை உடலையே நாங்கள் காணவில்லை" என்று அழுதது தாய் எலி.

"அழாதை அம்மா, நாங்கள் எப்படியும் பூனையைக் கொல்வோம் என்றது தங்கை எலி. அண்ணா எலி முகட்டின் மீது குந்தி இருந்து யோசித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது அம்மா எலி அங்கே வந்தது. 'மரவள்ளிக்கிழங்குத் துண்டு ஒன்றை தாத்தா கொண்டுவந்தார். இந்தா சாப்பிடு என்றது.

"எனக்குப் பசிக்கவில்லை அம்மா. பூனையைக் கொன்றால் தான் எனக்குப் பசிக்கும்".... பூனையைக் கொல்வதற்கு பலம் இருக்கவேண்டும். இந்தா இதைச் சாப்பிடு என்றது தாய் எலி. அண்ணா எலி - மரவள்ளிக்கிழங்கைத் தாயிடமிருந்து வாங்கிச் சாப்பிட்டது. அதனருகில் வந்த தங்கை எலி சொன்னது ..

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### நியூசிலாந்து

தலைவர் - வெலிங்டன்.
பரப்பளவு - 271 000 ச.கி.மீ.
நாணயம் - நியூசிலாந்து டொலர்.
மொழி - ஆங்கிலம், மாயோரி.
சமயம் - கிறிஸ்தவம்.
முக்கிய நகரங்கள் - வெலிங்டன், கிறிஸ்ட், சர்ச், ஆக்லாந்து, டூனிடின்.
சராசரி ஆயுள்
ஆண் - 76
பெண் - 81



இரண்டு பிரதான தீவுகள் ஒன்றாக இணைந்த நாடு நியூசிலாந்து ஆகும். இந்த நாடு தென் மேற்கு பசுப்பிக்கடலில் அமைந்துள்ளது. இரண்டு கலாசாரங்களைக் கொண்ட மக்கள் இங்கு வாழ்கிறார்கள். 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் இந்த நாட்டில் குடியேறத்தொடங்கினார்கள்.

உலகிலேயே முதன்முதலாக 1893 இல் பெண்களுக்கு வாக்குரிமை அளித்த நாடு இதுவாகும். பொதுச் சுகாதார மேம்பாடு அடைந்துள்ள உலக நாடுகள் சிலவற்றுள் நியூசிலாந்தும் ஒன்றாகும்.

நியூசிலாந்தின் பொருளாதாரம் - மந்தை வளர்ப்பில் தங்கியுள்ளது. செம்மறி ஆட்டு மந்தை வளர்ப்பதை முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளார்கள். உல்லாசப் பிரயாண மூலமும் வருமானங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இந்த நாட்டின் முக்கிய விவசாய உற்பத்திகளாக - அப்பிள், பார்லி, வெங்காயம், கால்நடைகள், மரத்தடிகளும். உற்பத்தியாக- இறைச்சி, பால்பொருட்கள். பேப்பர், துணிகள் ஆகியனவும் விளங்குகின்றது.



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- ர. தாரிகா
கற்கும் பாடசாலை :- வவுனியா மத்திய கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- ஓகன் வாசித்தல், பாட்டு, தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- ப. மணிகாந்
கற்கும் பாடசாலை :- யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன்
தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :- கிரிக்கெட், புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர் :- க. கஜிதா
கற்கும் பாடசாலை :- யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :- நடனம், வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- ச. நிலானி
கற்கும் பாடசாலை :- யாழ். புனித ஜோன் பொஸ்கோ
தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :- தொலைக்காட்சி பார்த்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- லோ. தேனுஷா
கற்கும் பாடசாலை :- யாழ். மாணிக்கவாசகர் வித்தியாலயம்
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :- கதைப்புத்தகம் வாசித்தல், கல்வித்துறை.

முழுப்பெயர் :- அ. கிறிஸ்ரி டினேஸ்
கற்கும் பாடசாலை :- சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :- ஓவியம் வரைதல், கதை எழுதுதல், வானொலி கேட்டல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................. திகதி .................. ஒப்பம்

.................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................. பெற்றோர் ஒப்பம்



அன்புச் சிறுவர்களே!

இன்று முதல் ஒவ்வொரு வாரமும் நான் உங்களுக்குக் கடிதம் எழுதப்போகிறேன்.


என்ன சந்தோஷமா? இப்பொழுது மூன்றாம் தவணைப் பரீட்சைக் காலம். கடுமையாகப் படித்துக்கொண்டிருப்பீர்கள். நன்றாகப் பரீட்சை எழுதுங்கள். என்னுடைய வாழ்த்துக்கள். விடுமுறைக் காலத்தில் உங்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கிறேன்.

சிறுவர் அரங்கம் - உங்கள் பகுதி. இந்தப் பகுதியில் பிரசுரிக்கப்படும் உங்களுடைய எந்த ஆக்கத்திற்கும் கட்டணங்கள் அறவிடப்படுவதில்லை. அத்தோடு, அனைத்துச் சிறுவர்களும் சமமாகவே கருதப்படுகின்றார்கள். எனவே இப் பகுதிக்கு எழுதுங்கள். இனிவரும் வாரங்களில் நிறையக் கடிதம் எழுதுகறேன். இப்பொழுது பரீட்சைக்கான ஆயத்தங்களில் இருப்பீர்கள்.

பாசமுடன் -சாரு அக்கா

--- இங்கே மடிக்கவும் ---


## உலகிலேயே மிகப்பெரிய பறவை



ஒஸ்ட்றிச் (OSTRICH) என்று அழைக்கப்படும் தீக்கோழிப்பறவைதான் உலகிலேயே மிகவும் பெரிய பறவை. இந்தப் பறவை வட ஆபிரிக்காவில் வாழ்கின்றது. அதன் உயரம் 9 அடி. நிறை 345 இறாத்தல்

இதனால் பறக்க முடியாது. ஆனால், வேகமாக ஓடமுடியும். மணிக்கு 50 கி.மீ வேகத்தில் ஓடும். இந்தத் தீக்கோழியின் முட்டை தான் பறவைகளின் முட்டைகளில் மிகப் பெரியது. அதன் நிறை 1750 கிராம். 8 அங்குல நீளமும், 6 அங்குல அகலமும் உடையது.

பறக்கும் பறவைகளின் மிகப்பெரியது (ALBATROSS) எனப்படும் பறவை. இந்தப் பறவை அந்தாட்டிக்காவை அண்டிய தென்கடலில் காணப்படுகிறது.



### விடுகதைகள்

1. கண்ணுக்குத் தெரியாதவன், உயிருக்கு உகந்தவன். அவன் யார்?
2. தலையைச் சீவினால், தாளிலே மேய்வான். அவன் யார்?
3. சுற்றுவது தெரியாது, ஆனால், சுற்றிக் கொண்டே இருப்பான். அவன் யார்?
4. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல். அது என்ன?

**விடைகள்**

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. முட்டை
5. [illegible]

கு. சாதனா, தரம் -3
யாழ். திருக்குடும்பக் கன்னியர்டம்.


### பழமொழிகள்

1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
2. பழகப்பழகப் பாலும் புளிக்கும்.
3. குறைகுடம் தளம்பும், நிறைகுடம் தளம்பாது.
4. கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை.
5. கடுகு சிறிதானாலும், காரம் பெரிது.
6. ஆற்றிலே போட்டாலும், அளந்து போடு.
7. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.

ச. சுபகரி
தரம் :4
சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம்

# கடிகாரம்





எங்களுடைய வீடுகளையும், கைகளையும் அலங்கரிப்பவை கடிகாரங்கள். அவை கண்டுபிடிக்கப்பட்டதற்கான அடிப்படைக் காரணம் என்னவாக இருக்கும்? யோசித்துப் பார்த்திருக்கின்றீர்களா?

சூரியன், சந்திரன், கோள்கள், நட்சத்திரம் ஆகியன தான், 'காலம்' என்ற மிகமிக முக்கியமான விடயத்தை மனிதர்களுக்கு அறிமுகப்படுத்தின. இவை சுற்றி வருவதைக் கணக்கிட்டே பருவ காலங்களும், மாதங்களும், ஆண்டுகளும் பின்பற்றப்பட்டன.

இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன் எலும்புகளையும், குச்சிகளையும், கோடுகளையும், குழிகளையும் பயன்படுத்தி, நிலவின் பிறைகளைக் கணக்கிட்டும் - காலக்கணக்குப் பார்க்கப்பட்டது.

ஐரோப்பாவில் இவ்வாறு நடைபெற்றமைக்குச் சான்றுகள் உண்டு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் டைகரிஸ், யூப்ரடிஸ் பகுதியில் வாழ்ந்த சுமேரியர்கள் - ஒரு கலண்டரைக் கண்டுபிடித்தனர். அதன் பின் இங்கிலாந்திலும், எகிப்திலும், பபிலோனியாவிலும், மத்திய அமெரிக்காவிலும் பயன்படுத்தப்பட்டு, படிப்படியாக வளர்ச்சி அடைந்த கலண்டரைத்தான், இப்போது பார்க்கிறீர்கள்.

ஐயாயிரம், ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா பகுதிகளில் நாகரிகம் செழித்தபோது, கடிகாரத்துக்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டன.

எகிப்தில் கி.மு. 3500 முதல் அமைக்கப்பட்ட சூரியக் கடிகாரங்கள்- நிழலைக் கொண்டு நேரத்தைக் காட்டின. நீர் மட்டத்தை வைத்து மணியைக் கணக்கிட உதவும் நீர்க்கடிகாரமுறை - எகிப்திலும், கிரேக்கத்திலும், இத்தாலியிலும், சீனாவிலும் உருவாகின. இவை பொதுவாக இயந்திரவியல் முறையில் இயங்கக்கூடியவை.

7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கணிதமேதை பாஸ்கரா - மணற்கடிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். 14 ஆம் நூற்றாண்டில் பெரியதான மெக்கானிக்கல் கடிகாரங்கள் - இத்தாலியிலுள்ள கோபுரங்களில் தொங்கவிடப்பட்டன.

டச்சு விஞ்ஞானி கிறிஸ்டியன் ஹைஜென்ஸ் 1656 இல் - முதல் பெண்டுலம் கடிகாரத்தைக் கண்டுபிடித்தார். அவருக்கு முன் 1582 இல் கலிலியோ கலிலி கண்டு பிடித்திருந்த பெண்டுலம் தத்துவம் பேருதவியாக இருந்தது. அந்தக் கடிகாரத்தில் நாளொன்றிற்கு ஒரு நிமிட பிழை இருந்தது. படிப்படியாக அந்தத் தவறு திருத்தப்பட்டது. 1920 ஆம் ஆண்டுகளில் தொடங்கிய குவார்ட்ஸ் தொழில் நுட்பம், பெண்டுலம் முறையைக் கைவிட வைத்தது. ஆனால், குவார்ட்ஸையே மிஞ்சும் அணுக்கடிகாரங்களின் காலகட்டத்தில் இன்று நாம் வாழ்கின்றோம். இந்த வகையான கடிகாரங்கள் ஆராய்ச்சிப் பணிக்கே பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

# உங்கள் கைவண்ணம்



க. நர்மதன்
தரம் - 8
யாழ். மத்திய கல்லூரி.



சா. கௌரிசா
தரம் - 2
யாழ். வடமராட்சி திருஇருதயக் கல்லூரி

## பாட்டி

அன்பு நிறைந்த பாட்டி என்னை
அணைத்துத் தூக்கும் பாட்டி
இன்பமான கதைகள் எல்லாம்
எனக்குச் சொல்லும் பாட்டி

வாழைப்பழமும் இனிப்பும் எனக்கு
வாங்கித் தந்த பாட்டி
தோளிற்எடுத்தி முதுகைத்தடவித்
தூங்க வைக்கும் பாட்டி

பள்ளிக் கூடப்பாடம் வீட்டிற்
படிக்கச் சொல்லும் பாட்டி
துள்ளிக்குதித்து மண்ணில் விழுந்தால்
துடைத்துக் கழுவும் பாட்டி.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

-திருக்குறள்.

# நமது நோக்கு

## 'நோர்வே'யின் தற்காலிக விலகல்.... சமாதானத்தை நிரந்தரமாகப் பிரிக்குமா?

கடந்த இரு வாரங்களாக சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் தொலைநோக்குத் திறனும், தேசியநலன் குறித்த பொறுப்புணர்வும் அற்ற, வெறும் அரசியல் சுயநலனும் அதிகார அகங்காரமும் கொண்ட அதிரடி நடவடிக்கைகளினால் எழுந்த அரசியல் குழப்பங்களின் எதிரொலியாக சமாதான முன்னெடுப்புகளின் எதிர்காலம் குறித்து நாம் கடந்த சில நாட்களாக எழுதிவரும் எண்ணங்களும், தெரிவித்து வந்த அச்சங்களும் நேற்றைய தினம் யதார்த்தமான நிலையை எட்டியுள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

நேற்று நோர்வே அரசானது சமாதான நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து, சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் ரீதியிலான நியாயமான தீர்வொன்றை எட்ட முடியுமென்ற நம்பிக்கையின் அடித்தளம் ஆட்டங்கண்டுள்ளது என்றே கூற வேண்டும்.

அதேசமயம் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசும், சமாதானத்தை முன்னெடுக்கும் பொறுப்பினைக் கைவிடுவதாகவும், அதனை ஜனாதிபதியே முன்னெடுக்க வேண்டும் எனவும், நேற்றையதினமே அறிவித்துள்ளமையானது, சமாதான முன்னெடுப்பின் எதிர்காலத்தை பரிதாபகரமான நிலைக்குத்தள்ளியுமுள்ளது.

தென்பகுதி அரசியலில், ஆளும் அரசிற்கும், அதிகார ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண் நிலையில், ஏற்பட்டுள்ள சிக்கல்களை, மோதல்களை தம்மால் சமாதானப்படுத்தவோ, தீர்க்கவோ முடியாதென்றும் இத்தகைய குழப்பச் சூழ்நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது சாத்தியமற்றதும், அர்த்தமற்றதுமான விடயமென்றும் நோர்வேத் தரப்பு தனது தற்காலிக நிலைக்கு விளக்கம் அளித்துள்ளது.

ஏற்கனவே முக்கிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை பிரதமர் நாட்டில் இல்லாதவேளையில், தன்வசம் எடுத்து இன்றைய தென்பகுதி அரசியல் நெருக்கடிகளும், சமாதான நகர்வுகளின் பின்னடைவு நிலைக்கும் முதற்காரணமான ஜனாதிபதியின் ஜனநாயக விரோத அதிரடி நடவடிக்கைகளினால் அதிகாரங்களற்ற வெற்று அரசின் பிரதமராகிவிட்ட ரணில், இந்த அதிகார வலுவற்ற நிலை சமாதானத்தை முன்னெடுக்கும் தனது முயற்சிக்குச் சாதகமானதல்ல என்று கூறி, தன் பொறுப்பினை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான விளக்கத்தை அளித்துள்ளார்.

ஆக, தென்னிலங்கையில் அரசியல் குழப்பங்களுக்கும், சமாதான முயற்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்துகளுக்கும் தென்பகுதி அரசியல் தலைமைகளின் சுயநல அதிகார அரசியல் போட்டா போட்டிகளே காரணம் என்பது தெளிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் - வன்னிக்கு வந்து தமிழீழத் தேசியத் தலைவரையும், விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளரையும் சந்தித்து சமாதானத்தின் இன்றைய நிலை மற்றும் சிறிலங்காவின் அரசியல் குழப்பம் ஆகியவை பற்றி கலந்துரையாடிய நோர்வே பிரதிநிதிகள் அரசுக் குழுவினரிடம், புலிகள் தமது சமாதானத்தின் மீதான பற்றுறுதியையும், போர் நிறுத்தத்தைத் தொடர்ந்தும் பேணுவதில் காட்டும் உறுதியையும் தெரிவித்துள்ளனர்.

எனினும் கூட அரசின் சார்பில் அரசியல் அதிகாரம்- பொறுப்பு ஆகியன எவான் கையில் உள்ளது என்பது தெளிவாகவில்லை. அது தெளிவாகும்வரை சமாதான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடமுடியாது என்பதே நோர்வே அரசு பிரதிநிதிகளின் நிலைப்பாடாகும்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது மற்றும் போர்நிறுத்தத்தைத் தொடர்வது ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு ஒரு தெளிவான நிலை காணப்படவில்லை என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருப்பது இதனைத் தெளிவாக்கும்.

விடுதலைப் புலிகளின் தரப்பினரால் நோர்வே பிரதிநிதிகளுக்கு கொடுத்த உறுதிமொழிகளைப் போன்று எதனையும் அரச தரப்பினரால் கொடுக்கமுடியவில்லை என்பதையும் நோர்வே அமைச்சரின் அறிக்கையின் மூலம் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.


இதன்மூலம் ஒன்றைச் சர்வதேச சமூகம் அறிந்துகொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது. அதாவது தேசத்தின் மிக முக்கியமான எரியும் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்களின் மூலம் தீர்வுகாணும் அதிமுக்கிய விடயத்தில் கூடச் சிங்கள அரசியல் தலைமைகள் புரிந்துணர்வுடனும், தொலைநோக்கு சிந்தனையுடனும் செயற்படாது தமது பதவி அதிகார அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் தீவிர முனைப்புடனேயே செயற்படுகின்றார்கள் என்பதே அதுவாகும்.

கடந்த சில மாதங்களின் முன்னர், விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்தபோதும், புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து சமாதானம் மீதான தமது விருப்பார்வத்தை இன்றுவரை நிரூபித்து வந்துள்ளதையும் சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டிய தருணமும் இதுவே.

இப்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் குறித்து முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு சிறிலங்காவின் அதிகார பீடங்களே தள்ளப்பட்டுள்ளன. அவர்கள் தேசிய பொறுப்புடன் கூடிய தொலைநோக்கு நடவடிக்கையில் இறங்குவார்களா? அல்லது குறுகிய அரசியல்லாப இலக்குடன் கூடிய நகர்வுகளை மேற்கொள்வார்களா?...

எதுவானாலும் சிறிலங்கா ஆட்சிப்பீடங்களின் பேரினவாதப் பயங்கரவாத முகத்தை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கான தருணமும் இதுவேயாகும்...

## நாடும் நடப்பும்




# சமாதானச் சூழலை நிரந்தரமாக்குவதற்கு நாடாளுமன்றத்தைக் கூட்ட அனுமதிக்கவும்

## கொழும்பு மேற்றிராணியார் ஜனாதிபதியிடம் கோரிக்கை

ஜனாதிபதி இல்லத்தில் - ஜனாதிபதி சந்திரிகாவை நேற்றுமுன்தினம் சந்தித்த கொழும்பு அதிமேற்றிராணியார், கலாநிதி அதிவண. ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை, தற்போதைய சமாதானச் சூழலை நிரந்தரமாகவும், நாட்டின் பதட்டநிலையைத் தணிக்கவும் ஏற்புடையதாக, பறித்த அமைச்சுக்களை மீளக் கையளித்து, நாடாளுமன்றத்தை இயக்க அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகால இனப்போரில், இருபகுதிகளிலும் நிகழ்ந்துள்ள இழப்புக்கள், பாதிப்புக்களைச் சுட்டிக்காட்டிய ஆண்டகை, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பேணுவதுடன், மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கும் வழிசமைக்கும் முகமாக, ஓர் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதில் இரு பகுதிகளும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவரும் நிலையில், அரசியல் மாற்றங்கள், பதட்டங்களைத் தவிர்த்து, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச்செல்ல வழிவகை செய்யுமாறு ஆண்டகை மேலும் ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன, மத, மொழி அனைத்தும் இணக்கப்பாடுள்ள ஒரு நிலையில், நாட்டின் இறைமைக்குப் பாதுகாப்பு ஏற்படாத ஓர் தீர்வுக்கு, முதற்தடவையாக வாய்ப்பு எழுந்துள்ளநிலையையும், அதிமேற்றிராணியார் சுட்டிக்காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசியல் யாப்பை குப்பைத் தொட்டிக்குள் தூக்கி எறியும் காலம் வந்துவிட்டதாம்!

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் தயாரிக்கப்பட்ட - அரசியல் யாப்பினைக் குப்பைத் தொட்டிக்குள் தூக்கியெறியும் காலம் வந்துவிட்டது. இந்த அரசியல் யாப்பினால் நாடு இன்று பல துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் - எமது தலைவரான றோகன் விஜேவீரவைக் கொன்றார்கள். ஆனால், அவரின் உணர்வுகளைக் கொல்லமுடியவில்லை. இன்றும் அவர் எமக்கு வழிகாட்டியாகவுள்ளார் எனத் தெரிவித்தார் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா.

ஜே.வி.பியினரால் நேற்றுமுன்தினம், தமது கட்சியிலிருந்து இறந்தவர்களின் 14 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு, சுகததாஸ அரங்கில் நடத்தப்பட்டது. அங்கு கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜே.வி.பியின் செயலர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

ஐக்கிய தேசியக் கட்சியினர் நினைத்தார்கள் - எமது தலைவரைக்கொன்றபின் ஜே.வி.பி அழிந்துவிடுமென்று. ஆனால், நாங்கள் மீளவும் எழுச்சியடைந்து வந்துள்ளோம். அவர்கள் எம்மை ஒருபோதும் அடக்கமுடியாது.

தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு- அமெரிக்கா, நோர்வே மற்றும் விடுதலைப் புலிகள், உலகவங்கியினது உத்தரவின்படி ஆட்டம்போடுகிறது. உலகவங்கி நாட்டின் நன்மை எனத் தரும் வட்டியுடன் கூடிய சிறுதொகை டொலருக்காக, ஐக்கிய தேசிய முன்னணி நாட்டைக் காட்டிக் கொடுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் - நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்கவை தூக்கியெறிவார்கள். அவர்களது வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால திட்டவரைபு, குப்பைத்தொட்டிக்குள் தூக்கிப் போடப்படும். ரணில் அரசு ஏகாதிபத்தியக் கொள்கையிலேயே தற்போது தங்கியுள்ளது. பிரிக்கப்பட்ட நாடு யாருக்குத் தேவை.

இலங்கையை மீண்டும் சுபீட்சமடையச் செய்வது என்பது, உலகவங்கியின் கண்டுபிடிப்பாகும். அது ஐக்கிய தேசிய முன்னணியின் மீது திணிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் தலைவரை - ஒரு கதாநாயகன் எனச் சில்வா குறிப்பிட்டார். ஜே.வி.பியின் முன்நோக்கிய செயற்பாடுகளுக்கு, விஜேவீரா உருவாக்கம் கொடுத்துள்ளார். மேலும் மார்க்சிஸ கோட்பாடுகளுக்குச் செயல்வடிவம் கொடுத்துள்ளார். மார்க்சிஸத்தின் சித்தாந்தங்களை எமது நாட்டின் அரசியல் சூழலுக்கேற்றவாறு செயற்படுத்தியுள்ளார்.

ஜே.வி.பி. என்றுமே இனவாதப் போக்குக்கொண்டதல்ல என்றும், தேசப்பற்றாளர் அமைப்பு என்ற கருத்தென்பதை இனவாதம் எனக் கருதக்கூடாதெனவும் தெரிவித்தார்.

நல்லவற்றை திரும்பச் திரும்பச் செய்வது சுலபம். ஆனால், தீமையான ஒன்றை நல்லதாக மாற்றுவது கடினம் எனவும் வீஜேவீரா சொல்வதாக குறிப்பிட்டிருந்தார். 1977 ஆம் ஆண்டு ஜெயவர்த்தன - திறந்த பெருளாதாரத்தை அறிமுகப்படுத்தியதாகவும், நாட்டின் சீர்குலைவுக்கு அதுவே காரணமெனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

தனது அரசியல் எதிரிகளைப் பலவீனப்படுத்தவே, ஜெயவர்த்தனவால் வடிவமைககப்பட்ட யாப்பு வழிவகுத்திருந்தது. இவரின் குண்டர்கள் நாட்டைத் திகிலுக்குள்ளாக்கியுள்ளார்கள். தனது அரசியல் கருத்துக்களை மறுத்தமைக்காக, நீதிபதியின் வீட்டிற்கு கல் எறிவதற்கும் தூண்டியுள்ளார்கள்.

இன்றைய அரசியல் யாப்பின - சிக்கல்கள் 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர் அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பின் மூலமே உருவாக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

# பாடசாலை மாணவனைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு

தீபாவளி விடுமுறையை முடித்துக்கொண்டு, பாடசாலை மாணவர் தங்கும் விடுதிக்குச் சென்ற சிறுவனைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் - ஊரிக்காடு காரைநகர் பகுதியில் நடைபெற்றுள்ளது. இந்திரகுமார் சசிதரன் (வயது 15) என்ற மாணவனே, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பாடசாலை மாணவர் தங்கும் விடுதியில் தங்கியிருந்து, கல்விகற்றுவந்தவர்.

இந்த மாணவன் - தீபாவளி விடுமுறையை தனது பெற்றோருடன் கொண்டாடுவதற்காக, மாப்பானை ஊரி, காரைநகர் என்னும் முகவரியிலுள்ள தனது வீட்டுக்குச் சென்று, விடுமுறையினைக் கழித்துவிட்டு, மீண்டும் இவர் தங்கி கல்வி கற்ற பாடசாலையான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்றவர், இதுவரை அங்கு சேரவில்லையென தமது மகன் பற்றிய தகவல் எதுவும் தெரியாத சிறுவனின் பெற்றோர் முறைப்பாடு ஒன்றினை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்துள்ளனர்.

இந்த மாணவன் தொடர்பான விபரம் அறிந்தவர்கள், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# நெடுந்தீவு கரையோர பகுதியின் பாதுகாப்பு அணை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்!





நாற்புறமும் கடலன்னை தாலாட்ட, வனப்புடன் வழங்கொழிக்கும் நெடுந்தீவின் மக்கள்- வருடத்தில் காலநிலையினால் ஏற்படும் சகல மாற்றங்களுக்கும், அதன் சீற்றங்களுக்கும் முகங்கொடுத்தவாறே இன்றுவரை தங்கள் வாழ்க்கையை ஓட்டிச் செல்கின்றார்கள்.

அந்தவகையில், தற்போது வீசத் தொடங்கியுள்ள வாடைக்காற்றினால், தீவின் வடகடலோரத்தில் குடியமர்ந்துள்ள பல மீனவக் குடும்பங்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைமையிலுள்ளனர்.

நெடுந்தீவின் வடக்குப்பகுதியில் - கரையோரப் பகுதியின் கிழக்கு அந்தோனியார் கோவில்பகுதி தொடக்கம், மத்தி காளாமுனை பகுதிவரை மக்கள் செறிந்து வாழ்கின்றார்கள். இவர்களது குடிமனைகள்- கரையோரத்தை அண்டியே காணப்படுகின்றன. கடற்றொழிலின் நலன்கருதியே, இவ்வாறு கரையோரமாக மக்கள் செறிந்து வாழ்கின்றதுடன், தீவின் முக்கிய வருமான வழியாகவும், கடற்றொழிலே விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

வாடைக்காற்றுக் காலத்தில், பெரும்பாலும் தாளைத்துறைப் பகுதியில் கரையோர மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்வது தொடர்கதையாகச் செல்கிறது.

தாளந்துறைப் பகுதியில், சுமார் 100 மீற்றர் நீளம் வரைக்கும் கொங்கிறீற்றால் ஆன கடற்தடுப்பு அணை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதனை புனரமைக்கவோ, பராமரிக்கவோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல், கடலரிப்பினால் நாளாந்தம் அழிவடைந்து செல்கிறது.

இரு கிலோமீற்றர் அளவுக்கும் கூடுதலான மக்கள் செறிந்து வாழும் கடற்கரைப் பிரதேசத்தில் 100 மீற்றர் அளவான அணையே இதுவரை கொங்கிறீற்றினால் அமைக்கப்பட்டது என்பதை எண்ணி அந்தப் பகுதி மக்கள் கவலையும், விரக்தியும் அடைந்துள்ளனர்.

1991 ஆம் ஆண்டு கடல்வேகத் தடுப்பணை என்ற பெயரில் முருகைக் கற்களைக் கொண்டு தடுப்பணைகள் கட்டப் பட்டது. ஆனால், வேகமாக வீசும் வாடைக்காற்றினால் மட்டுமன்றி, சாதாரண கடற்கொந்தளிப்புக்கும் இந்தக் கற்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அதன் சொச்சங்கள் இன்று குறைந்தளவு தடுப்பினை



மேற்கொள்ள வழிவகை செய்கின்றது.

வாடைக்காற்றுப் பலமாக வீசும் வேளைகளில் - கடலில் கொந்தளித்து எழும் அலைகள் கரையோரம் உள்ள வீடுகளில் புகுவதும், மதில்கள், வேலிகளை அடித்துச் செல்வதும், வழமையாக நடக்கிறது. சொந்தச் செலவிலே தடுப்புக்களை மேற்கொள்ளும் அளவுக்கு இவர்களது வருமானம் போதாது. எனவே, இதனைக் கவனத்திலெடுத்து, வெளிநாட்டு நிறுவனங்களாவது அணைகளைக் கட்டித்தர முன்வரமாட்டார்களா என, அந்தப் பகுதி மக்கள் ஏங்கிக் கிடக்கின்றார்கள்.

கடல் கொந்தளிக்கும் காலங்களில் மீன்பிடிப்படகுகள், கட்டுமரங்கள் போன்றவற்றைக்கூட, பாதுகாப்பாக நிறுத்தமுடியாத நிலையால் அவை பாறைகளுடன் அடிபட்டு உடையும் அபாயமுள்ளது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, தங்களது மீன்பிடிக் கலங்களை மாவலித் துறைமுகப் பகுதியில் தற்போது நிறுத்திவைத்துள்ளனர்.

மாவலித்துறைமுகப் பகுதிக்குப் போடப்பட்ட முருகைக்கல் கடற்தடுப்பு அணையும் இன்று துறைமுகப் பகுதியில் அலைகளால் அள்ளுண்டு பரவிக்கிடக்கின்றது.

நெடுந்தீவின் வடகரையோரப் பாதுகாப்பிற்காகவும், குறிப்பிட்ட பகுதிகளில் வளரும் கரையோர மக்களின் நிம்மதியான வாழ்வுக்காகவும் கடல் வேகத்தடுப்பு அணை அவசியமானதொன்று. எனவே, இந்த நடவடிக்கையினை உரியவர்கள் முன்னின்று முயற்சித்து முடிவுகாணவேண்டும். இல்லையெனில், காலப்போக்கில் வடகடற்கரையோரம் கடலினால் காவுகொள்வது நிச்சயம். கடந்தகால அபிவிருத்திக்கென கடலிலும், கரையிலுமாக கொட்டிக் கரைத்த நிதிகளை, இவ்வாறான ஒரு நீண்டகாலத் திட்டத்தில் செயற்படுத்தியிருந்தால் மக்கள் நிம்மதியாக வாழ்வர்.

**கண்ணன்**

எனவே, கரையோரப் பகுதி மக்களின் பாதுகாப்பான வாழ்வுக்கு வழியமைக்கும் வகையில், கடல் அணை அமைக்கும் நடவடிக்கையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் கவனத்திற்கொண்டு உதவவேண்டும் என, அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறார்கள்.

# யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதார நிலை கவனிக்கப்படுமா?



செய்திக் கட்டுரை

வைத்தியசாலைகள் மனித உயிர்களைக் காக்கும் புனித இடங்களாக மதிக்கப்படுகின்றன. இத்தகைய வைத்தியசாலைகளில் சுத்தம் பேணுதல் என்பது மிகவும் அவசியமானது. இதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

எனினும், யாழ்.மாவட்டத்திற்கென உள்ள ஒரேயொரு பெரிய வைத்தியசாலையாக விளங்குவது யாழ். போதனா வைத்தியசாலை (**Jaffna Teaching hospital**) மட்டுமேயாகும்.

இங்கு வெளிநோயாளர் பிரிவில்- ஒரு நாளைக்கு சராசரியாக 500 வரையிலான நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர். இவர்களில் 200 வரையிலான நோயாளிகள் வைத்தியசாலையில் தங்கி, சிகிச்சை பெறவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இவ்வாறு ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கானோர் தங்கி, வைத்திய சிகிச்சையைப் பெறவேண்டி ஏற்படும் நிலையில், இவர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ளவர்களாக மட்டுமல்லாமல், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

குறிப்பாக, மேலதிக சிகிச்சைக்கு வரும் வன்னிப்பகுதி நோயாளர்களும், சிகிச்சை பெற்றுச் செல்கின்ற அளவுக்கு மிகமுக்கியமான வடபகுதி மக்களின் வைத்திய சேவை நிலையமாகவுள்ள யாழ். போதனா வைத்தியசாலையில், இன்றுவரை ஒழுங்கான முறையில் சுகாதாரம் பேணப்படுவதில்லை.

இது கவலை அளிக்கும் ஓர் விடயமாகவுள்ளது. ஏனெனில், உபதேசம் உனக்கல்லடி என்று கூறுவதைப்போல்- சுகாதாரம், சுத்தம் பற்றிப் பேசுகின்ற, அறிவுறுத்துகின்ற அதிகாரிகள் பணிபுரியும் இடம் இந்த வைத்தியசாலை. இங்கு சுத்தம் பேணப்படாமல், நோய்கள் ஏற்பட வழிவகுக்கக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

வைத்தியர்கள், தாதியர்கள், தாதிப் பயிற்சியாளர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், நோயாளர்கள், நோயாளரைப் பராமரிப்போர், தங்கியிருப்போர் என - தினமும் இங்கு மூவாயிரத்துக்கும் அதிகமானோர் தங்கி நிற்கநேரிடுகின்றது.

இவர்களை நோய்க் காரணிகளிலிருந்து பாதுகாக்கவேண்டிய பாரிய பொறுப்பு வைத்தியசாலை நிர்வாகத்தைச் சேர்ந்தது. ஆனால், அவ்வாறு சுத்தம் பேணும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகவோ, சுகாதார நடவடிக்கைகளில் அக்கறை செலுத்துவதாகவோ தெரியவில்லை.

எங்கு பார்த்தாலும் ஆங்காங்கு வீசப்பட்ட நிலையில் போத்தல்கள் மற்றும் கழிவுகள், நீர்க்கசிவுகள் காணப்படுவதுடன், சில இடங்களில் பற்றைகளும் வளர்ந்து காணப்படுகின்றன. சில இடங்களில் மலசலம் கழிக்கப்பட்டு, மிகவும் நாற்றம் எடுக்கின்ற இடங்களாகக் காணப்படுகின்றன.

கழிவு வாய்க்கால்கள் சில அடைபட்டுக் காணப்படுகின்றன. இத்தகைய நீர்த்தேங்கங்கள் உள்ள இடங்கள் நுளம்புப் பெருக்கத்துக்கு வழிவகுக்கும். இதனால் - டெங்கு, மலேரியா, யானைக்கால் முதலான நோய்களைப் பரப்பக்கூடிய நுளம்புகள் பெருக வாய்ப்பேற்படுகின்றது.

இதனால், இங்கு தங்கும் மூவாயிரத்துக்கும் அதிகமானோரின் சுகாதாரப் பாதுகாப்பு கேள்விக்கிடமாகும் நிலை தோன்றுகின்றது.

இத்தகைய சுகாதாரப் பராமரிப்புத் தவறுகள் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்குத் தெரியாமல் இடம்பெறுகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இதனால், அத்தகைய சுகாதாரச் சீர்கேடான இடங்களைச் சுட்டிக் காட்டவேண்டிய தேவையும் உண்டு.

மிகமுக்கியமாக கழிவு மையமாக விளங்குகின்ற 29 ஆம், 30 ஆம் வாட்டுகளின் பின்னால், குறிப்பாக புதிய வைத்தியர் விடுதிக்கு அருகிலுள்ள கழிவு மேடையாகும். இங்கிருந்த கழிவுகள் அகற்றப்பட்டு, குறைந்தது ஆறு மாதங்களாவது ஏற்பட்டிருக்கவேண்டும்.

இந்தக் கழிவு மேட்டில் காணப்படும் பிளாஸ்ரிக் பொருட்களில், தற்போது பெய்துவரும் மழையால், நீர் நிறைந்து காணப்படுகின்றது. இதனால், நுளம்புகள் தாராளமாகப் பெருகும் நிலை தோன்றியுள்ளது.

அதேபோல், வைத்தியசாலையின் சுற்றுப்புறங்களில் மட்டுமல்லாது, உட்பகுதிகளிலும்கூட பல இடங்களில் புல், பூண்டுகள் வளர்ந்து பற்றைகளாகக் காணப்படுகின்றன. இதனால் - நுளம்புப் பெருக்கத்திற்கும், அவை மறைந்து வாழ்வதற்கும் தக்க இடமாக யாழ்.வைத்தியசாலைச் சூழலுள்ளது.

இதனைவிட, மிகமுக்கியமானதொரு சுகாதாரச் சீர்கேடு மிக்க இடமாக விளங்குவது, பழைய வெளிநோயாளர் பிரிவுக்கு அண்மையிலுள்ள பாவிக்கப்படாத கட்டடமாகும்.

இதனுள் சிலர் மலசலம் கழித்து, மிகவும் துர்நாற்றம் மிக்க இடமாக மாற்றியுள்ளனர். இங்கு நீர் தேங்கக்கூடிய பல இடங்கள் உள்ளன. இந்தக் கட்டடத்தைச் சூழவுள்ள பகுதிகள் கவனிப்பார் அற்றுக் காணப்படுவதால், மிகவும் அடர்ந்த பற்றைகள் காணப்படுகின்றன.

இந்தக் கட்டடத்திற்கு அருகிலேயே குழந்தைகள் சிகிச்சைபெறும் 16 ஆம் வாட் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சில வாட்டுகளிலுள்ள மலசலகூடங்கள், பழுதடைந்த நிலையில் உள்ளன. இதனால், நோயாளிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. இந்த விடயத்திலும், வைத்தியசாலை நிர்வாகம் மௌனம் சாதித்தே வருகின்றமை கவலைக்குரியதாகும்.

உயிர்காக்கும் நோயினைக் கருதிச் செல்லும் வைத்தியசாலையிலேயே, மரணபயம ஏற்பட்டால் மக்கள் என்ன செய்வார்கள். வைத்தியசாலை நிர்வாகத்தினர் இவற்றையெல்லாம் நியாயப்படுத்துவார்களேயானால், பிரச்சினை தீர வழியேற்படாது.

நிலைமையின் ஆபத்துக்களை உணர்ந்து, சரியான நடவடிக்கை எடுப்பதன்மூலம் மழைக்காலத்தில்



ஏற்படக்கூடிய சுகாதாரச் சீர்கேடுகளைத் தவிர்த்து, மக்களுக்கு உயர்ந்த சேவையை வழங்குவார்களானால், அதுவே எமது சமுதாயத்தின் உன்னத பணியாகக் கருதப்படும். வைத்திய சேவையின் மேன்மையை உறுதிசெய்யும்.

வைத்தியசாலையின் எந்தப் பக்கம் திரும்பினாலும், 'சுத்தம் சுகம் தரும்' என்ற வாசகத்தைக் காண முடியும். ஆனால், இந்த வாசகத்துக்கு வைத்தியசாலையே உட்படாது போகும்போது, இந்த வாசகத்தின் அர்த்தம் பற்றி சாதாரண மக்கள் எதை விளங்கிக்கொள்வார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் யாழ்.வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள் கவனமெடுத்துச் செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

**செந்தணன்**

# ஈராக்கில் அமெரிக்க ஹெலி மேற்கொண்ட தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்!

திக்ரிற் நகரில் அமெரிக்க அப்பாச்சி ஹெலி மேற்கொண்ட தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர்.



இதேவேளை, ஈராக்கின் புனர்நிர்மாண பணியகத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்த அமெரிக்க பிரஜை ஒருவர் ஈராக்கியத் துப்பாக்கி தாரியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஈராக்கில் தொடரும் வன்முறைகளால் ஆட்சியை ஈராக்கியர்களிடம் விரைவாக கையளிப்பதற்கு அமெரிக்க அரசு முடிவுசெய்துள்ளதாக அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே வான்படையைச் சேர்ந்த 101 ஆவது பிரிவில் கடமையாற்றும் படையினர் 14 பேரை சந்தேகத்தின்பேரில் அமெரிக்கப் படையினர் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று ஈராக்கின் தெனபகுதியில் போர்த்துக்கல் பத்திரிகையாளர்கள் பிரயாணம் செய்த வண்டியின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அதில் பிரயாணம் செய்த பெண் செய்தியாளர் ஒருவர் காலில் காயமடைந்தார்.

# துருக்கி உல்லாச விடுதியில் தீப்பிடித்து ஒன்பது பேர் பலி

## மின் ஒழுக்கே காரணமாம்

துருக்கியின் துறைமுக நகரான ஸ்மெரிலில் வியாழக்கிழமை உல்லாச விடுதி ஒன்று தீப்பற்றிக்கொண்டதில் 9 பேர் கொல்லப்பட்டதாக பொலிஸாரும் தீயணைக்கும் படையினரும் தெரிவித்துள்ளார்கள்.

5 பெண்களும் 4 ஆண்களும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மின்சுற்றில் ஏற்பட்ட ஒழுக்கினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் நடைபெற்றபோது 30 பேர்வரை அந்த விடுதியில் இருந்ததாகவும், அவர்கள் காயங்கள் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கொல்லப்பட்டவர்கள் புகையினால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உலக நோக்கு

# கள்ளக்கடத்தல் பொருட்களை மாற்ற அல்ஜீரியாவில் கழுதைகள் பாவனை!

அல்ஜீரியாவில் இருந்து கள்ளக் கடத்தல் பொருட்களை மொரோக்கோவுக்கு எடுத்துச் செல்வதற்கு கழுதைகளைப் பாவிப்பதாக, எல் கபர் என்ற பத்திரிகை தெரிவித் துள்ளது.

அல்ஜீரியாவில் கடத்தல்காரார் கள், கடத்தல் பொருட்களுடன் பதியப்பட்ட நாடாக்கள் அடங்கிய உப கரணங்களையும், கழுதையுடன் இணைத்து, கடத்திச் செல்ல வேண்டிய பாதையூடாக அனுப்பி விடுவார்கள். பதியப்பட்ட நாடாக்களின் செய்திகள் மூலம் மற்றவர்களின் உதவியின்றி, மொரோக்கோ எல்லைவரை கழுதைகள் கடத்தல் பொருட்களை எடுத்துச் செல்வதாகவும், பலவேளைகளில் கழுதை கள் கொல்லப்படுவதாகவும், அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தப்பித்துக்கொள்ளும் கழுதைகள் மொரோக்கோவிலிருந்து பொருட்களை அல்ஜீரியாவுக்கு எடுத்துவருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

மொரோக்கோவில் நடைபெற்ற குண்டுத்தாக்குதல்களின்பின் இரு நாடுகளுக்குமிடையே அமைந்த எல்லை மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய அமைச்சரின் மகள் கடத்தப்பட்டு தீவிரவாதிகளினால் புதனன்று சுட்டுக்கொலை!

இந்திய மணிப்பூர் மாநில அமைச்சர் பிரான்சிஸ் நககோபாவின் எட்டு வயதுடைய புதல்வி கடந்த புதன்கிழமை கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார். மணிப்பூரில் தனிநாடு கேட்டுப் போராடிவரும் குழு ஒன்றினாலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

துப்பாக்கியால் சுடப்பட்டபின் சடலத்தை சாக்கு ஒன்றினுள் வைத்து தலைநகரிலுள்ள ஏரியொன்றினுள் தீவிரவாதிகள் எறிந்து விட்டுச் சென்றுள்ளனர்.

நீர் எடுப்பதற்காக ஏரிக்குச் சென்ற பெண்கள் சிலர், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் இறந்து கிடந்த உடலைக் கண்டு பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து - அவர்கள் சடலத்தை ஏரியிலிருந்து மீட்டனர்.

இதேவேளை, நவம்பர் நாலாம் திகதி பாடசாலைக்குச் சென்ற அமைச்சரின் புதல்வி வீடு திரும்பவில்லை என்றும், பின்னர் மகளை விடுவிப்பதற்கு 1.5 மில்லியன் ரூபா கப்பம் தருமாறு கேட்டு தீவிரவாதிகள் மந்திரிக்கு தகவல் அனுப்பியதாகவும், அவர்கள் கேட்ட தொகையின் ஒரு பகுதி வழங்கப்பட்டிருந்த நிலையில், இக்கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் உடல் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மணிப்பூரில் காலவரையறையற்ற அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜனநாயகம் நிலைநாட்டப்படும் வரை அமெரிக்கப் படைகள் ஈராக்கில் இருக்கும்

## அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட்



அரசியல் அதிகாரங்கள் ஈராக்கிடம் கையளிக்கப்பட்டாலும், அங்கு ஜனநாயகம் நிலை நிறுத்தப்படும்வரை தனது படைகள் ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. முற்றாக ஜனநாயக அமைப்பொன்று உருவாகுவதற்கு இரண்டு ஆண்டுகள் தேவைப்படலாம் என, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

ஈராக்கில் தாக்குதல்கள் நாளாந்தம் தொடர்வதால் விரைவில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு ஈராக்கில் உள்ள அமெரிக்க அதிகாரி போல் பிரிமரிக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஏற்கனவே திட்டமிடப்பட்ட வழிமுறைகளான அரசியல் யாப்பு தயாரித்தல், யாப்புத் தொடர்பாக கருத்துக் கணிப்பொன்றை நடத்துதல், அதன் பின்னரே ஆளும் அதிகாரங்களை ஈராக்கியரிடம் ஒப்படைத்தல் ஆகிய திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளதாக, பி.பி.ஸியின் செய்தியாளர் யஸ்ரின் வெப் தெரிவித்தார்.

இதேவேளை, பஸ்ராவின் தென்பகுதியில் அமைந்துள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையின் அதிகாரசபையின் அலுவலகத்திலிருந்து பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டு, பாதுகாப்பு அதிகாரிகள் வெளியில் நடமாடுவதைக் குறைத்துள்ளதாகத் தெரியவருகிறது.


ஈராக்கின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குப் பொறுப்பாக இருந்த அமெரிக்க இராணுவத் தளபதி ஜோன் அபிசெயிட் தமது காரியாலயத்தை அமெரிக்காவிலிருந்து கட்டாருக்கு மாற்றியுள்ளார்.


# உலகின் உயரமான கட்டடம் தாய்வானில் நிர்மாணிப்பு!

உலகில் மிகவும் உயரமான கட்டடம் தாய்வானில் அமைக்கப்பட்டுள்ளது. 101 மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடம் வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

இதன் கடைசி மாடியில் காலநிலை அவதானநிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சீனாவில் உள்ள சுங்காயில் 2007 ஆண்டு கட்டி முடிக்கப்படவுள்ள உலக நிதி மையம் - உலகின் மிக உயரமான கட்டடமாக அமையுமென அந்தக் கட்டடத்தை உருவாக்கும் அதிகாரிகள் தெரிவித்தனர்.





# அல்கொய்டா சேகரிக்கும் நிதியை கட்டுப்படுத்தும் முயற்சி தோல்வி!

## ஐ.நா.சபை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு



அல்-கொய்டா தீவிரவாத அமைப்பிற்கு சேகரிக்கப்படும் நிதியைக் கட்டுப்படுத்துவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக தாம் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் அல்-கொய்டா விற்கான நிதி சேகரிப்புக்கள் எதுவித தடையுமின்றி நடைபெறுவதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பல நாடுகள் சரியான முறையில் இந்தத் தீவிரவாதிகளுக்கு எதிரான தகவல்களை வழங்குவதற்கு முன்வருவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அல்-கொய்டாவுக்கு நிதி வழங்குவதாக சந்தேகிக்கப்படும் தொண்டு அமைப்புக்கள், மனிதநேய பணிகளில் ஈடுபட்டுவருவதால் அவர்களுக்கெதிராகச் செயற்படமுடியாதிருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெனாசிரின் கணவரை விடுவிக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(பாகிஸ்தான்)

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கணவரான "அசிப் சடாரி"யை விடுதலை செய்யுமாறு பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஏழு ஆண்டுகளாக "அசிப் சடாரி" சிறைவாசம் அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி பெனாசிர் பூட்டோவின் அரசு கலைக்கப்பட்டபோது கைது செய்யப்பட்டார்.

அசிப் சடாரிக்கு எதிராக 12 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. கொலைகளுக்கு உடந்தையாக இருந்தமை, லஞ்ச ஊழல், போதை வஸ்து கடத்தல் என்பன இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் சிலவாகும்.

இதேவேளை, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவிற்கு எதிராக நிதி மோசடி தொடர்பாக சுவிற்சர்லாந்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தென் பகுதி அதிகாரப் போட்டியை நிறுத்தவே சமாதானபேச்சிலிருந்து நோர்வே விலகியது!

## அமெரிக்க பல்கலைக்கழக விரிவுரையாளர் றோபேட் ஒபேஸ்

நோர்வே சமாதான முன்னெடுப்பு முயற்சிகளில் இருந்து தற்காலிகமாக விலகியிருப்பது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையேயான அதிகாரப்போட்டியை நீக்குவதற்கே ஆகும். இந்த தற்காலிக விலகல் நீண்ட நாட்களுக்கு தொடராது என அமெரிக்க பல்கலைக்கழக விரிவுரையாளர் றோபேட் ஒபேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ் பல்கலைக்கழகத்தில் சமாதான முயற்சிகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்ற போதேஇவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் பேசுகையில் சமாதானத்திற்கான திட்டவரைபுகளில் விடுதலைப் புலிகளின் கடல் பகுதி எமக்கு தேவை என்னும் கூற்றும், நிதித்துறை தமக்கு தேவை என்பதும் தேசிய மட்டத்திலான பிணக்குகளை எவ்வாறு தீர்ப்பது, எந்த நீதிமன்றில் தீர்ப்பது. அரச நிர்வாகம் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரவேண்டும் என்பனவே மத்திய அரசு எதிர்நோக்கும் பிரச்சனை.

இவற்றை விட இராணுவ முகாம்களை எடுப்பது தொடர்பாக அரசு அக்கறை காட்டவில்லை,இதனால் அரசுக்கு வீண் பணச்செலவுகள் ஏற்படுகின்றன. குறுகிய நிலப்பரப்புக்களில் முகாம்களை அமைக்கலாம். இவற்றை விட வருமான வரி பெறுவது எவ்வாறு, மத்திய அரசாங்கத்திற்கு கொடுப்பது, பிரதேச அரசாங்கத்திற்கு கொடுப்பது போன்ற சர்ச்சைகள் உள்ளன.

முக்கியமாக வரி விடயத்தில் இரு அரசும் பங்கிட்டுக்கொள்வது சிறந்தது என நினைக்கிறேன்.

இவற்றை விட இலங்கை அரசாங்கம் ஓரளவு திறந்த மனதுடன் செயற்படுகின்றது. சமஷ்டி அரசாங்கம் என்பது ஓர் மக்கள் ஆட்சிக்கு இணையானதொன்று. சமஷ்டி அரசியல் முறையின் கீழ் சில அதிகாரங்களை பிரதேச அரசாங்கத்துக்கு கொடுத்தால் மீளப்பெறமுடியாது. பத்து வருடத்திற்குப் பின் இங்குள்ள வளர்ச்சிகளைப்பார்த்த போது பெணகள் ஓரளவு வளர்ந்துள்ளனர். இவற்றை விட வீடு சொத்துக்கள் கடுமையாக அழிவுற்று இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

## நாரந்சந்தி

மத்தியானச் செய்தி கேட்டீங்களோ... என்ன நோர்வே இப்படிச் செய்துபோட்டுது? என்றார் கந்தசாமியர்.

ஏன் ... என்ன நடந்திட்டுது... என்று படபடத்தார் கனகர்.

'சமாதான நடவடிக்கையிலிருந்து தற்காலிகமாக விலகிறதென் நல்லே அறிவிச்சுப்போட்டினம்...'

'அட அப்படியென்றால் ஜே.வி.பியும் சிஹல உறுமயவும், பிக்குமார் முன்னணியும் வெடிகொளுத்தி கொண்டாடியிருப்பினம்...' என்ன என்றார் கனகர்.

'நான் எங்கட திண்டாட்டத்தைப்பற்றிச் சொன்னால் நீ அவங்கட கொண்டாட்டத்தைப்பற்றிப் பேசுறாய்' என்றார் சினத்துடன் கந்தசாமியர்.

'எங்களுக்கென்ன திண்டாட்டம்... அதுசந்திரிக்காவுக்கும், ரணிலுக்குமெல்லோ... நாங்கள் எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் எண்டு யோகர்சுவாமி சொன்னதுமாதிரி இதெல்லாம் எதிர்பார்த்தது தானே' என்றார் கனகர் அலட்சியமாக...

'ரணில் மிரண்டால் சந்திரிகா மிரட்டுவார்... சந்திரிகா கெஞ்சினால் ரணில் மிஞ்சுவார்' என்றார் அவரே தொடர்ந்து.

'நீ சொல்லுறது விளங்கேல்ல' இது கந்தசாமியர்.

'இப்ப ரணில் சமாதானத்தை சந்திரிகாவின் தலையில் ஏற்றியுள்ளார். முந்தி இதேசந்திரிகா ரணிலிடமிருந்து அதைப்பறித்தெடுக்க நினைத்தார். இப்ப ஏற்றிவைச்சதை தானே தூக்கியெறிய முடியாது மீண்டும் ரணிலிடமே சுமத்த நினைக்கிறார்...' பாத்தியளே கால மாற்றத்தை என்றார் கனகர்.

'இப்ப நோர்வேயுமெல்லோ கையைவிரிச்சிட்டு...' என்று அங்கலாய்த்தார் கந்தசாமியர்.

இவர்கள் பேச்சைக்கேட்டுக்கொண்டிருந்த பண்டிதர் ஐயா மாப் புளிக்கிறது அப்பத்துக்கு நல்லது என்று பொடிவைத்துப் பேசினார்.

'விளங்கிக்கொள்ளக்கூடியதை விளங்கிக்கொண்டால்சரி'

-தெருவாசி

### ஜனாதிபதியும்...

கொண்ட ஜனாதிபதி சந்திரிகா இன்று கண்டிக்கு செல்லவுள்ளார். இதேவேளை தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை குறித்து அஸ்கிரிய,மல்வத்தை பீடாதிபதிகளுக்கு விளக்கமளிக்க பிரதமர் ரணில் கண்டிக்கு செல்கின்றார்.

எனவே கண்காணிப்புக்குழுவினர் விலகினால் நாட்டில் பாரிய பிரச்சினை ஏற்படலாமெனவும் அதனை எதிர்கொள்வது தொடர்பாகவுமே இரு தலைவர்களும் உத்தியோகபற்றற்ற முறையில் இன்று சந்திக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

### புலிகளுடன்....

விடுதலைப் புலிகளை முற்றாக நசுக்கிவிட ஜனாதிபதி சந்திரிகா ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

### சமாதான...

முன்னெடுப்பதற்கு வாய்ப்பேதும் இருப்பதாகக் கருதவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி முன்வைத்துள்ள தேசிய அரசு அமைப்பது தொடர்பான திட்டத்தை முற்றாக நிராகரித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உள்ளதாகவும், அமைச்சுக்களைப் பகிர்ந்து கொள்வது மட்டுமே தேசிய அரசை அமைக்கப் போதுமானதல்ல என்றும் குறிப்பிட்டார்.

### அரசியல் குழப்ப...

பெயர்ந்து வாழும் நான்கு லட்சம் பேரினதும், இந்தியாவில் புலம் பெயர்ந்து வாழும் 66 ஆயிரம் இலங்கை அகதிகள் குறித்தும் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

### பாதுகாப்பு...

ளின் குழுக்கூட்டத்திலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எமது அரசாங்கத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை தனித்தனியாகவே சந்தித்து, இந்த அரசாங்கத்தைப் பலமிழக்கச் செய்வதில் ஜனாதிபதி ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் ஜனாதிபதி தெரிவித்த தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று நீங்கள் நினைத்துள்ள உங்கள் கருத்துக்களை எமக்குத் தெரிவிக்கலாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

### நோர்வேயின்...

மணி நேரம் இடம் பெற்றதாக, தமிழ் தேசியக்கூட்டமைப்பின் செயலாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலமைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந்த நெருக்கடி குறித்து அறிக்கையொன்று வெளியிடவும், இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சனைத் தீர்வுக்கு யாப்பில் திருத்தம் அவசியம்

## அத்தாவுட செனிவிரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு அரசியல் யாப்பில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுட செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

டெடிகம தேர்தல் தொகுதியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், நாட்டில் இருபது வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இந்த யுத்தத்தைமுடிவுக்கு கொண்டு வருவதற்க்கு அரசியல் ரீதியான தீர்வொன்று அவசியமாகும்.இதற்கு அரசியல் அமைப்பில்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை நடாளுமன்றத்திற்கு தேவையாக உள்ளது.இந்த எண்ணிக்கையை அடைவதற்கு நாட்டின் இருபிரதான அரசியற கட்சிகளும் ஒன்றினையவேண்டும்.

ஜனாதிபதிக்கும்,பிரதமருக்கும் இடையில் அரசியல் பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெறவேண்டும். இதனையே பெரும்பான்மையான மக்கள் விரும்புகின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

### புலிகளுடனான சமாதானப் பேச்சை...

களை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் சம்பந்தப்பட்ட கட்சிகள் தமது சுயலாபத்தை கைவிட்டு தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முன்வர வேண்டும்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கிசனுடன் நடைபெற்ற பேச்சுக்களின் போது, யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு மதிப்பளித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் சுதந்திரமாக நடமாடி தமது கடமைகளைச் செய்வதற்கு தாம் அனுமதியளிப்பதாகத் தெரிவித்தார்.

பாதுகாப்பு படையினர் கண்காணிப்பு பிரிவினருக்கு பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர். இதற்கான உத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

பாதுகாப்பு, உட்துறை, ஊடகத் துறை ஆகிய மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றுக்கொண்டமை அரசியல்யாப்புக்கு அமைவான நடவடிக்கையாகும்.

அரசும் விடுதலைப்புலிகளும் செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்தும் அமுலில் உள்ளது. விடுதலைப் புலிகளும், அரசாஙகமும் சமாதானப்பேச்சுக்களைத் தொடர வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய பாதுகாப்புப்படையினர் பாதுகாப்பை வழங்குவர். இந்த ஒத்துழைப்புக்கு அமைய தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லவேண்டும்.

தேசிய புனரமைப்பு நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்கவேண்டும் என்றும், இத்தகைய அரசாங்கத்தில் சகல கட்சிகளும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவ முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தருணத்தில், இரண்டு மேலதிக ஆலோசனைகளையும் ஜனாதிபதி முன்வைப்பதாக, பின்வரும் முன்மொழிதல்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன :-

1.அனைத்துக் கட்சிகளும் உள்ளடக்கப்பட்ட தேசிய அரசை அமைப்பதன் மூலம், சமாதானப் பேச்சுக்களை அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்துச் செல்லுதல்.

2. ஜனாதிபதிக்குக் கீழ் தற்போது இயங்கும் பாதுகாப்பு செயலகத்திற்கும், பிரதமரின் கீழ் இயங்கும் சமாதான செயலகத்திற்கும் இடையில் ஓர் இணைப்பாக செயற்படக்கூடிய தனிக் குழுவை நியமித்து, பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்குத் தேவையான அவசிய பாதுகாப்பு மற்றும் விடயங்கள் குறித்து மேற்பார்வையும், அனுசரணையும் வழங்குதல்.

ஜனாதிபதி இத்தகைய செயற்பாட்டுத் திட்டங்கள் குறித்து, இந்தியா உட்பட ஏனைய நாட்டின் பிரதிநிதிகளுக்கும், நிதி வழங்கும் நாடுகளுக்கும் ஏற்கனவே அறிவித்துள்ளதாக, அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமாதான முயற்சியிலிருந்து...

அரசியல் வெற்றிடம், போர்நிறுத்தத்தில் நெருக்கடி நிலை ஏற்படுத்துவதில் தங்கி நிற்கிறது எனக் குறிப்பிட்ட அவர் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தமது நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ளும் என்றார்.

கடந்த நாட்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மூன்று தடவைகளும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இரண்டு தடவைகளும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை ஒரு தடவையும் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

விடுதலைப் புலிகள் போர்நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில், உறுதிப்பாட்டைத் தெரிவித்திருந்ததுடன், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியற்பணியாற்றும் போராளிகள் சுதந்திரமாக நடமாடுவதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க வேண்டுமென்றும் கேட்டிருந்தார். இதுபற்றி அரசதரப்புடன் உரையாடியபோது, தெளிவான உத்தரவாதம் கிடைத்துள்ளது. அவர்கள் கண்காணிப்புக்குழுவுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்தனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் நோர்வே மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகளின் உறுப்பினர்கள் சுதந்திரமாக நடவடிக்கையில் ஈடுபட பாதுகாப்பு முக்கியமானது, கடந்த வாரம் முதல் சமாதான நடவடிக்கையில் சடுதியான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

தெற்கில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள், சமாதான நடடிக்கையை முன்னெடுப்பதில் பெரும் தடையை ஏற்படுத்தி இருந்தது. இது சமாதான நடவடிக்கைக்கு இடையூறாக அமையாது அத்துடன், இது சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனை ஒரு மோசமான நிலைமையாகவே நாங்கள் கருதுகிறோம்.

சமாதான நடவடிக்கைகள் எளிதில் உடையக்கூடியதல்ல. ஆனால், உடைக்கப்பட முடியாது என்றும் கூறமுடியாது. இலங்கையில் தற்போதைய அரசியல் நெருக்கடிகள் தொடர்ந்தால், பெருமளவு ஆதரவைப் பெற்றிருக்கும் சமாதான நடடிக்கைகள் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகலாம்.

இந்த அரசியல் நெருக்கடிகள் தொடருமாயின், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வது சாத்தியமற்றது. போர் நிறுத்தம் முறிவதற்கான சாத்தியங்கள் அதிகம். அரசியல் நிலைகளில் தெளிவான ஒரு நிலைமை ஏற்படுமானால் சமாதானப் பேச்சுக்கள் நாளையேகூடத் தொடங்கலாம். கடந்த வாரத்திற்கு முன்னர் ஒரு தெளிவான நிலைமை இருந்தது. இப்போது அது இல்லாதிருப்பதாக அமைச்சர் ஹெல்கிசன் மேலும் தெரிவித்தார்.

IIS
புலமைப்பரிசில் திட்டம் 2004
புலமைப்பரிசில் திட்டம் 2004 ற்கான விண்ணப்ப முடிவு திகதி அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 30.11.2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடா நாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1564 திகதி: 14.11.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| W | 6 | 9 | 1 | 0 | 7 | 8 |

யாழ் நகரில்
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!
1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்
ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.
Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்,
52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
☎:021-2225187

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.